விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 04 சனிக்கிழமை. (17.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் கூட்டணி அமைக்காது



### அதன் தலைவர் ஹக்கீம் உறுதி

(கொழும்பு)

அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ், கூட்டணி அமைக்கப் போகின்றது எனத் தெரிவிப்படும் தகவல்களில் உண்மையில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணியை அமைத்துள்ளோம். எனவே அரசுடன் கூட்டணி அமைக்கப் போவதில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனோ அல்லது அரச தரப்பின் வேறு நபர்களுடனோ நாம் எந்தப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் அமைக்கப்பட்டு இருந்த வீதிக் கடைகள் அகற்றப்படுகின்றன

### யாழ்.மாநகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டிருந்த நடைபாதைக் கடைகள் யாழ்.மாநகர சபையின் உத்தரவுக்கமைய அகற்றப்படுகின்றன.

இவ் வீதியில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைக் கடைகளினால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. நல்லூர்க் கந்தனின் புனிதத்துவமும் அழிக்கப்படுகின்றது.

போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டு வீதி விபத்துக்களும் ஏற்படுகின்றன என பல் வேறுபட்ட சமூக ஆர்வலர்களினாலும் பொது மக்களினாலும் விசனம் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந் நிலையில் யாழ்.மாநகர சபையின் நடவடிக்கைகளை அடுத்து நேற்று முதல் நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டு வருகின்றன. (16 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மை மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக் கூட்டு நடவடிக்கை

## த.தே.கூ.-சி.மு.கா. பேச்சு

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து செயற்படவுள்ளன. இது குறித்துப் பேச வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு அழைப்பு விடுத்துள்ளது. நாவலப்பிட்டியில் மீள் தேர்தல் நடைபெற்ற பின்னர் கொழும்பில் இப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)



நடைபாதைக் கடைகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உரிமையாளர்கள்

## வினைத்திறன் மிக்க அமைச்சர்கள் இம் முறை தெரிவு செய்யப்படுவர்



### ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

இம் முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள மிகவும் பொருத்தமான மற்றும் வினைத்திறன் மிக்கவர்களை அமைச்சரவைக்குத் தெரிவு செய்யவுள்ளதாகவும் அமைச்சரவை 35ற்குக் குறையாமலும் 38ற்கு மேற்படாமலும் இருக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட நிலை மாத்திரமல்லாது நாடாளுமன்ற கலாசாரம் குறித்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னரிமை வழங்குவது தனது நடைமுறை எனவும் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதும் தனது அரசியல் நோக்கம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

18 இலட்சம் மேலதிக வாக்குகளால் என்னை வெற்றி பெறச் செய்த மக்கள் இம் முறை மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை நெருங் (16 ஆம் பக்கம் பார்க்க)

## 22 ஆம் திகதி சுபநேரத்தில் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பம்

(கொழும்பு)

7-வது நாடாளுமன்ற அமர்வுக்கு காலை 8.30க்கு முன்னதாக சமுகமளிக்கும்படி சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற முதல் அமர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சுபநேரமான காலை 8.45ற்கு ஆரம்பமாகவுள்ளது.

கடந்த காலங்களில் நாடாளுமன்ற அமர்வு காலை 9.30ற்கு ஆரம்பிக்கப்பட்டது. புதிய நாடாளுமன்ற அமர்வின்போது சபாநாயகர் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

(ச-9)

## ஜ.ம.மு.தலைவர் மனோ கணேசனின் வாகனத் தொடரணி மீது தாக்குதல்

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற வேட்பாளருமான மனோ கணேசனின் வாகனத் தொடரணி மீது நேற்றிரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி ஹதில்ஹேன பகுதியில் வைத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொலிஸாரின் பாதுகாப்புடன் சென்றும் கூடத் தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் முன்னாள் அமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்கள் எனத் தாம் அடையாளம் கண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐந்து வாகனங்களில் பொலிஸாரின் பாதுகாப்புடன் சென்றபோதே வழி மறித்து இத் தாக்குதல் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் புதிய எம்.பிக்கள் திருமலையில் சந்திக்கத் திட்டம்

(கொழும்பு)

புதிதாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்ததன் பின்னர் முதல் தடவையாக சகல உறுப்பினர்களும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஊடகங்களுக்கு விசேட அறிக்கை ஒன்று வெளியிடப்படவுள்ளதாகக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் ஐந்து மாவட்டங்களில் போட்டியிட்டு 12 ஆசனங்களைப்பெற்றுக் கொண் (16 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## பேசும் படம்




வாடகைக்கு விடப்பட்டதா...!

# லசந்த படுகொலை விசாரணை கல்கிசை நீதிமன்றில் எடுக்கப்பட்டது

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்தவின் படுகொலை தொடர்பான விசாரணைகள் நேற்று கல்கிசை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தாம் சந்தேகத்திற்குரிய தொலைபேசி இலக்கங்கள் குறித்து தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றத்துக்கு தெரிவித்தனர்.

விசாரணைகள் பூர்த்தி அடையும் வரை அவற்றை இரகசியமாகப் பேண விரும்புவதாகவும் நீதிமன்றிற்கு அவற்றை வழங்க விரும்பவில்லை என்றும் குற்றத் தடுப்புப் பொலிஸார் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணை அறிக்கைகள் வெளிவருமிடத்து வெளித்தரப்புகளால் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக நேரிடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்கிசை மேலதிக நீதவானிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்த அவர்கள் விசாரணைகள் பூர்த்தியானதும் அவ் அறிக்கைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் முடிபடைந்ததும் அவற்றினது அறிக்கைகளை நீதிமன்றத்துக்கு சமர்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார். (ச-3,5)

# திருமலைக்கடற்பரப்பில் அமெ. கடற்படை பயிற்சி

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரும் அமெரிக்க கடற்படையினரும் இணைந்து பயிற்சிநடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் திருகோணமலை கடற்கரையோரப் பிரதேசங்களில் நடத்தப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் ஹெந்தல்பிட்டிய 22ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ஊடகவியலாளர் சுசில் கெந்தல்பிட்டிய எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றைவைத்திருந்ததாக நீதிமன்றத்தில் பொலிஸார் விளக்கியதை அடுத்து ஹெந்தல்பிட்டிய உட்பட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுக்காலை இந்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஹெந்தல்பிட்டிய உட்பட சந்தேகநபர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

குறித்த துப்பாக்கி தன்னியக்க துப்பாக்கியா? இல்லையா? என்பது தொடர்பாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என ஹெந்தல்பிட்டிய சார்பாக நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும் குறித்த துப்பாக்கி தன்னியக்க துப்பாக்கியா இல்லையா என்பது தொடர்பாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவிக்காததால் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க முடியாதென நீதவான் லங்கா ஜெயரட்ண கூறினார்.

அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்களிடம் துப்பாக்கியை சமர்பிக்குமாறும் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

ஹெந்தல்பிட்டிய உட்பட சந்தேக நபர்கள் சார்பாக சானக ரணசிங்க, நிசந்தகமகே, சுஜிவ சேனசிங்க, அச்சித பத்திரண, சிறிரணகெல, அஸார் சாஹிர், மஞ்சுல பதிராஜ சுபோதினி டேவிட் ஆகிய சட்டத்தரணிகள் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தனர். (ச-3,5,9)

# உல்லாச முகாமைத்துவம் கற்கை நெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 2010/2011 கல்வியாண்டிற்கான உல்லாச முகாமைத்துவ கற்கை நெறிக்குரிய (Tourism Operations) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை இன்று சனிக்கிழமை முதல் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ச)

# பாம்பு கடித்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற குடும்பஸ்தரை பாம்பு தீண்டியதில் அவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் சங்கானையைச் சேர்ந்த யோ.செல்வராசா (வயது 49) என்பரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் இரவு வேளை வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த போது பாம்பை மிதித்ததாகவும் அதன் போதே அவரை பாம்பு தீண்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதில் காயமடைந்த அவர் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு உயிரிழந்தார். பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-30)

# அ.இ.முஸ்லிம் காங்கிரசுக்கு தேசிய பட்டியல் உறுப்பினர்?

(கொழும்பு)

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக ஒரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவுள்ளதாக மாகாண தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் நியமன பெயர்ப்பட்டியலில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஒருவரின் பெயர் உள்ளடக்கப்பட்டிருப்பதாக நம்பதகுந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் 3 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மாநகர சபையிலும் அடையாளப்பதிவு இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

மாநகர சபையிலும் விரல் அடையாளப் பதிவு இயந்திரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

விரல் அடையாளப்பதிவு இயந்திரம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நடைமுறையிலுள்ளது.

அதேபோன்று மாநகரசபை சுகாதாரப் பகுதியிலும் இவ் இயந்திரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மற்றோ பொலின் தனியார் நிறுவனம் அதன் முகவர் நிறுவனமான நவகலா நிறுவனத்தினூடாக இவ் இயந்திரத்தை வழங்கியுள்ளது. (ச)

# வாகன விபத்தில் இரு பெண்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் இராணுவ வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் இரு பெண்கள் காயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை நாவற்குழியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கண்டி வீதி அரியாலை 12 ஐச் சேர்ந்த எம். கஜேந்தினி (வயது 35), ஆர்.பவிதா (வயது 20) ஆகியோரே காயமடைந்துள்ளனர். (ச-14)

# தேர்தலில் தோல்வியடைந்த ஐ.தே.கவின் உறுப்பினர்களுக்கு வேறு பதவி வழங்க ஆலோசனை

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த அனைத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த கட்சியின் இணை நிறுவனங்களின் பொறுப்புக்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தேசிய ஊழியர் சங்கம், தேசிய இளைஞர் முன்னணி, லக்வனிதா உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் இணை நிறுவனங்களில் தலைவர் பதவிகளை வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அந்த பதவிகளில் இருந்து விலகச் செய்து இந்த பதவிகளை தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தீர்மானித்துள்ளார்.

இந்த யோசனையை அடுத்து நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் முன்வைக்கப்படவுள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்தனர். (ச்-5)


## மனோதத்துவ வைத்தியம்

*(General Psychotheraphy)*

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

மீண்டும் யாழில்

17.04.2010 முதல் 25.04.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு )(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

மானிப்பாய் வீதியிலிருந்து 'செல்வ மாளிகை'
(பழைய வலம்புரி காரியாலயம்)
இல.15 ,வெள்ளாந்தெரு ,யாழ்ப்பாணம் .
T.P.: 0719315664 , 0777569205

(சி-113)



## தேவை

சிறிய குடும்பமொன்றுக்கு யாழ். நகரை அண்டிய பகுதிகளில் அல்லது நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 077 8690911

(1197)



## சேவை முகவர்

விற்பனைக்கு

கந்தர்மடம், கோண்டாவில், உரும்பிராய் பலாலி வீதி, 150 மீற்றர் தூரம் 9 பரப்பு பொற்பதி வீதி, நல்லூர் ஆகிய இடங்களில், காணிகள், வீடு விற்பனைக்குண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : சுந்தரம்
222 9177, 071 462 4830

(1199)



## காணி விற்பனைக்கு

வேம்படி வீதியும் 1ஆம் குறுக்கு வீதியும் இருவழி பாதையில் அமைந்துள்ள 2 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0726514451
021 222 2284

(1187)

# இன்று ஒரு தகவல்

## உலகம் நல்லதா? கெட்டதா?

உலகம் ரொம்ப கெட்டுப் போச்சு சேர்; அந்தக் காலத்தில் எல்லாம் இது மாதிரி அக்கிரமம் நடக்குமா? என்று சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் உண்டு.

இந்த உலகம் ரொம்ப முன்னேறியிருக்கு சேர்; அடுத்த கிரகத்துக்கே போய் வீடு கட்டலாமா? என்று யோசிக்கும் அளவுக்கு வந்து விட்டோமே! என்பவர்களும் உண்டு.

அது சரி! நிஜமாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா?

கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா?

அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வரவில்லையானால் அதற்காக கவலைப்பட வேண்டாம். வாங்க... இராம கிருஷ்ணரிடம் போவோம்.

அவர் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார். ஒரு சின்னக் கதை மூலமாக!

'உலகம் நல்லதா? கெட்டதா' என்று ஒரு பெரியவரைப் பார்த்து கேட்டிருக்கிறார்.

அதற்கு அந்தப் பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து,

"அதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்"என்றார்.

"சரி கேளுங்க" என்றார் அவர்.

"பூனைக்குப் பல் இருக்கே அது நல்லதா? கெட்டதா?" என்று கேட்டார் இவர்.

இதைக் கேட்டதும் அவர் குழம்ப ஆரம்பித்தார்.

"என்னது? நாம உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டோம். அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா? கெட்டதா? என்று நம்மிடமே திருப்பிக் கேட்கிறாரே! என்று யோசித்தார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதன் பின் அந்தப் பெரியவர் அதற்கு விளக்கம் கொடுத்தார்.

"ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா கெட்டதா என்று கேட்டால் என்ன பதில் வரும். யாரிடம் அந்தக் கேள்வியைக் கேட்கிறோமோ அதற்குத் தகுந்த மாதிரித்தான் பதில் வரும்."

பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று அந்தப் பூனைக் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

"எங்க அம்மாவிடம் இருக்கிறது வெறும் பல் இல்லை. அது கருணையின் வடிவம். அந்தப் பல்லால் தான் எங்க அம்மா என்னைக் கவ்வித் தூக்கி கொண்டு பாதுகாப்பான இடங்களுக்குப் போவா. அது இல்லை என்றால் நான் இல்லை" என்று தான் குட்டிப் பூனை பதில் சொல்லும்.

ஆனால் இதே கேள்வியை ஒரு எலியிடம் கேளுங்க.

அது என்ன சொல்லும்:

"பல்லா அது? எமன்!

கடவுள் பூனையைப் படைத்ததோடு விட்டிருக்கக் கூடாதா அதற்குப் பல்லையும் எதற்குப் படைத்தார் குத்தூசி மாதிரி! அந்தப் பல்லின் கொடுமை என்னவென்பது கடிபடும் எனக்குத் தானே தெரியும்" என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டிப் பூனை பார்க்கின்ற பார்வை ஒரு மாதிரி! எலி பார்க்கின்ற பார்வை ஒரு மாதிரி!

அதே மாதிரி தான் இந்த உலகம் நல்லதா-கெட்டதா என்று கேட்டால் ... இந்த உலகத்தின் தன்மையைப் பார்க்கின்றவர்களைப் பொறுத்தது அது.

இந்த உலகம் உள்ளவரைக்கும் இதை நல்லது என்று சொல்பவர்களும் இருப்பார்கள், கெட்டதென்று சொல்பவர்களும் இருப்பார்கள்.

எப்போதும் சந்தோஷமாக இருக்கின்ற இரண்டு பேர் சந்தித்துக் கொண்டார்கள். உங்க சந்தோஷத்திற்கு என்ன காரணம் என்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விசாரித்துக் கொண்டார்கள்.

"என் அத்தை மகள் என்னைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று உறுதியாக சொல்லி விட்டது. அது தான் நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்றார் ஒருத்தர்.

"என்னுடைய அத்தை மகள் என்னை கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன் என்று உறுதியாக சொல்லி விட்டது அது தான் நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்றார் இன்னொருவர்.

இரண்டும் இரண்டு விதமான பார்வை!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி வடமராட்சி வலயமட்ட முடிபுகள்

(அல்வாய்)

அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியின் வடமராட்சி வலய மட்டப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

**பிரிவு - 01**

**எழுத்தாக்கம்**

ப. கோபிகா (மாணிக்கவாசகர் வித்தி), யே. மேரி டியூளினி (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை), த. தேனுஜன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

**பிரிவு-02**

**கட்டுரை வரைதல்**

பா.சௌமியா (மெதடிஸ் பெ.உ.க), ஜெ.விவேகா (பரு.சித்தி விநாயகர் வித்தி), ஜெ.அருள்தாஸ் (கரணவாய் ம.வி).

**பிரிவு-03**

**கட்டுரை வரைதல்**

கோ. மயூரி (மெதடிஸ் பெ.உ.க), வி .சோபியா (சென்தோமஸ் றோ.க. பெ.பா), த.தனுசிகா (கரணவாய் ம.வி).

**பிரிவு - 04**

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

த.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி), தி.கலைவாணி (வட மத்திய ம.க), ச.கஜீபா (உடுப்பிட்டி ம.க).

**இலக்கணப் போட்டி**

கோ. தர்மிகா (வட இந்து மகளிர் கல்லூரி), செ. அனுசியா (வல்லை மகளிர் ம.வி), மு.சிவானந்தி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**குறுநாடக ஆக்கம்**

இ. மைதிலி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ. பிரணன் (நெல்லியடி ம.ம.வித்தி), சி. சதீஸ்வரன் (ஹாட்லிக் கல்லூரி).

**சிறுகதை ஆக்கம்**

இ. மேரி நிசாந்தினி (குடத்தனை காரை A.M.T.M.S, பி. லக்சிகா (வல்வை சிவகுரு வித்தி), இ. அபர்ணன் (விக்னேஸ்வராக் கல்லூரி).

**கவிதை ஆக்கம்**

செ. சுதாங்கி (விக்னேஸ்வராக் கல்லூரி), வா. ஜெயமீரா (வட இந்து ம. கல்லூரி), தி. கௌசிகா (உடுப்பிட்டி ம.கல்லூரி).

**பிரிவு -05**

**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

ஜெ.ஜெசிதா( உடுப்பிட்டி ம.க), சு. தாரணிகா (வட மத்திய ம.க), த. லோஜிதா (விக்னேஸ்வரக் கல்லூரி).

**திறனாய்வுப் போட்டி**

ம. நிருஜா (விக்னேஸ்வரக் கல்லூரி), க. நிதர்சனா (வட இந்து மகளிர் கல்லூரி), இ. கணநாதன் (ஹாட்லிக் கல்லூரி).

**இலக்கணப் போட்டி**

ந. தயாளினி (விக்னேஸ்வராக் கல்லூரி), அ. மதுரா (வட இந்து மகளிர் கல்லூரி), அ. துளசி (உடுப்பிட்டி ம. கல்லூரி).

**சிறுகதை ஆக்கம்**

இ. பிரியங்கா (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), பி. பிரதீபா (சிதம்பரக் கல்லூரி), க. நிவேதா (வடமத்திய மகளிர் கல்லூரி).

**குறுநாடக ஆக்கம்**

அ. கோகுலன் (நெல்லியடி ம.ம.வி), செ. சுகன்யா (வல்வை மகளிர் ம.வி), ம. தர்சிகா (விக்னேஸ்வராக் கல்லூரி).

**கவிதை ஆக்கம்**

வெ. எழில் அரசி (வட இந்து மகளிர் கல்லூரி), பா. பாலகௌரி (வடமராட்சி ம.ம. கல்லூரி), வி. விஷ்ணுப்பிரியா (விக்னேஸ்வராக் கல்லூரி). (6)

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் லோட்டஸ் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் லோட்டஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் ஏ2கே விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் நடத்தி வரும் மென்பந்தாட்டக் கிரிக்கெட் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (6-4)

## இராசி பலன்

*17-04-2010*
*(சித்திரை 04 , சனிக்கிழமை)*
*திருதியை மாலை 6.03 மணிவரை*
*கார்த்திகை முன்னிரவு 7.02 மணிவரை*
*இராகுகாலம் 9.04-10.34 மணிவரை*
*சுபநேரம் 3.04-4.34மணிவரை*
*கைதடி வீரகத்திப் பிள்ளையார் கொடி, மாதகல் நுணசைக் கந்தசுவாமி கொடி, மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கொடி, கார்த்திகை விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, உஷ்ண வியாதி, முயற்சி தாமதம், அதிக செலவு. |
| இடபம் | நண்பர்கள் சந்திப்பு, புதிய முயற்சி, போசன நன்மை, கற்பனை மிகுதி. |
| மிதுனம் | தந்தை வழி உறவு, செய்தொழில் விருத்தி, பிரயாணம், தனவிரயம். |
| கடகம் | குடும்ப சுகம், விருந்துபசாரம், கீர்த்தி, காரிய நன்மை. |
| சிங்கம் | கடின உழைப்பு, தூரதேசச் செய்தி, காரிய நன்மை, போசன சுகம். |
| கன்னி | அதிக பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, அச்சமான நிலை, பிரயாணம். |
| துலாம் | வீண்பகை, காரிய தாமதம், பணவிரயம், பிரயாண நன்மை. |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி, பொருள் சேர்க்கை. |
| தனுசு | தொழில் ஆர்வம், உறவினர் சந்திப்பு, சத்துருஜெயம், காரிய நன்மை. |
| மகரம் | அதிக செலவு, உறவினர் மனஸ்தாபம், வேலைச்சுமை, போசன சுகம். |
| கும்பம் | பெரியோர் உதவி, நண்பர்கள் சந்திப்பு, சுபசெலவு, பிரயாணம். |
| மீனம் | கூட்டுமுயற்சி, - தனவருவாய், உறவினர் வருகை, போசன சுகம். |

வளவன்

## பொதுத்தேர்தல் பணிகளில் ஈடுபட்ட அரச அதிகாரிகளுக்கான கொடுப்பனவு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது கடமையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கான கொடுப்பனவுகளை துரிதகதியில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான சுற்று நிருபம் தேர்தல்கள் ஆணையாளரினால் அரசாங்க அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பணிகளில் ஈடுபட்ட அரச அதிகாரி களின் கொடுப்பனவுகளை எதிர்வரும் ஜுலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | கல்வியங்காடு |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 50 |
| தக்காளி | 100 | 120 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 50 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 100 | 120 | 100 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 70 |
| லீக்ஸ் | 180 | 200 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 50 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 260 | 280 | 400 |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை காலை 10மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (6-4)

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான் - வடஷேரியம்பதி அருள் மிகு ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 26ஆம திகதி திங்கட்கிழமை மாலை6 மணிக்கு சப்பறமும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் , மறுநாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் சனாதனதர்மம் -2 எனும் விடயம் பற்றி ஓய்வுபெற்ற அஞ்சல் பயிற்சிக்கல்லூரி அதிபர் ரி.ரி.சண்முகநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4-35)

## மணவாளக் கோலவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சரமத்தில் அமைந்துள்ள ஈழத்து காசி லிங்கேஸ்வரப் பெருமான் அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் மணவாளக் கோலவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (6-4)

## மாவட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டி

(அல்வாய்)

யாழ்.மாவட்ட மட்ட தமிழ்மொழி தினப் போட்டிகள் எதிர்வரும் 23, 24,25 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்.மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இம்முறையும் யாழ்.மாவட்ட மட்டப் போட்டியின் பொறுப்பாளராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா நியமிக்கப்பட்டுள்ளதுடன் போட்டிகளுக்கான ஒழுங்குகளும் மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-19)

## க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்

**யா/கரணவாய் மகாவித்தியாலயம்**

பு.தளாஸ்மோகன் -6ஏ,2பி,எஸ், சி, மயூரன்-4ஏ,3சி,எஸ்,பா.துவரகா-4ஏ, 4பி,எஸ்.

**யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்**

இ.டிலானி -5ஏ,3பி,சி, கா.ஜெயரூபினி - 5ஏ, 2பி, சி, எஸ், பா.ராஜினி-2ஏ, 2பி, 3சி, 2எஸ், த.மயூரியா -2ஏ, 3பி, 2சி, எஸ், சி. அகிலன்-2ஏ, பி, 3சி, 2எஸ், தெ.கீர்த்திகா-2ஏ,பி,2சி,3எஸ், ப.வனிதா-2ஏ,பி,சி, 3எஸ், ஆ.லக்ஷனா-2ஏ, 2சி, 3எஸ், இ.கஜேந்தினி- ஏ.,2பி, 4சி,எஸ், இ. பாலேந்திரதாஸ்-ஏ,2பி,3சி, 2எஸ், கு.நிரோஜன்-ஏ,பி,2சி, 3எஸ், கி.சுகந்தன்-ஏ,பி,சி,4எஸ்.

**யாழ்.மத்திய கல்லூரி**

*ஆங்கிலமொழி மூலம்*

எஸ்.ஸ்ரீபிரவீன்-3ஏ, 3பி, 2சி, எஸ், எஸ்.ஸ்ரீலக்ஷ்மன்-2ஏ, 2பி, 3சி, 2எஸ், எஸ்.ஜீவிதன் -2ஏ,பி,3சி,3எஸ், ஆர்.விதூஷனன் - ஏ,பி,3சி,3எஸ், எஸ்.அம்புஜன்-ஏ,5சி,2எஸ்,என்.நிரோஷன்-ஏ,5சி,2எஸ்.

*தமிழ்மொழி மூலம்*

பி.பனோஜன்-7ஏ, 2பி, ஏ.தனுசன்-6ஏ,2பி,சி, ரி.இந்துஜன்-5ஏ,2பி,2சி, எஸ். ரஜித்குமாரன்-5ஏ, 3பி, சி, ஆர்.கிரிஷாந்-4ஏ,2பி,சி,எஸ், யு.கெங்கேசன்-4ஏ,2பி,சி, 2எஸ், என்.ரஜீவன்-4ஏ,3பி,சி,எஸ், ரி.ஜெறூஜன்-4ஏ,2பி,2சி,எஸ்,எஸ். கிரிஷாந்-4ஏ,4சி, எஸ்.நிதர்ஷன்-3ஏ,3பி,சி,2எஸ், வை.துஷிகன்-3ஏ,2பி,3சி,எஸ்.

ஆர்.தயான்சன்-3ஏ, 3பி, 2சி, எஸ் வி.நிதுஷன்-3ஏ,பி,2சி,2எஸ், கே. பௌஷன் -3ஏ, 2சி, 4எஸ், ரி.லவேன்ஷன்-3ஏ, 2பி, 2சி, எஸ், எம்.மதன்ராஜ்-3ஏ, பி, 4சி, எஸ், ஜெ.யூட்டனிஸ்ரன் - 3ஏ, 3பி, சி, எஸ், யூ.டானியல்-3ஏ, 2பி, 3சி, எஸ், டபிள்யூ. பெனாஜ்-3ஏ,பி,3சி,எஸ், ஏ.கஜீபன்-3ஏ,பி, 2சி,3எஸ், என். நிதர்ஷன்-3ஏ,சி,3எஸ்.

எஸ்.சதோக்-2ஏ, 3பி, 3சி, எஸ், என்.பரந்தாமன்- 2ஏ, 3பி, 3சி, எஸ், ரி. ஜெசூரன்-2ஏ, 4பி, 2சி, எஸ், எஸ்.பிரணவன்-2ஏ,3பி,4சி, பி.சுதர்சன்- 2ஏ,3பி,2சி, 2எஸ், எஸ். லாவண்யன்-2ஏ,3பி,3சி,எஸ்.

## திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்டத்தின் ஏற்பாட்டில் இரு நாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமை ஓவியப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.

இரு நாட்களும் காலை 9 மணிமுதல் 1மணிவரையும், மாலை 2 மணி முதல் 4 மணிவரையும் இப் பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளது.

இல 17, றக்காவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்றத்தில் நடைபெறவுள்ள இப் பயிற்சிப் பட்டறையில் மட்டக்களப்பு கதிரவெளி மகாவித்தியாலய ஓவிய ஆசிரியரான ஓவியர் எஸ்.என்.வாசன் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

இதில் ஓவியத் துறையில் ஈடுபாடுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## வலய மட்ட தமிழ்த் தினப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டிகள்தவிர்ந்த ஏனைய போட்டிகள் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (4-19)

## நிலையறி பரீட்சை மதிப்பீட்டு இறுவட்டை ஒப்படைத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அதிபர்களை நிலையறி பரீட்சை மதிப்பீட்டு இறுவட்டை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாள் அறிவித்துள்ளார். (4)

## பரு.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா

(அல்வாய்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாநாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதியும் நீதவானுமான திருமதி ஜோய் மகிழ்மகாதேவன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக ஹாட்லிக் கல்லூரி அதிபர் ந. தெய்வேந்திரராஜா, யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஏ.எவ்.ஜெ. ரூபசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் இப் போட்டியில் வெற்றிபெறும் வீர வீராங்கனைகளுக்கான பரிசில்களை பிரதமவிருந்தினர் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். ள (6-4-19-30)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் — கலைஞர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் அண்மையில் மேடையேற்றப்பட்ட "வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் நாடகத்தில் பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களுக்குமான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தின் தலைவராகப் பணியாற்றும் மன்றத்தின் மூத்த கலைஞரான பெஞ்சமின் இம்மானுவேலுக்கு மன்றத்தின் அதி உயர் விருதான "கலைஞரான பூரணன்" விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

இவ்விரு நிகழ்வுகளிலும் திருப்பாடுகளின் காட்சியில் பங்குபற்றிய கலைஞர்கள் உட்பட மன்றத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் மற்றும் ஆர்வலர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (6-4)

## சங்காபிஷேகம்

(அல்வாய்)

மேலைப்புலோலி சொக்கன் கலட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு 1008 சங்காபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (4-19)




### வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ்

## நல்லூர் பிரதேசசபைக்கு உட்பட்டவீதிகள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபை பிரிவிலுள்ள வீதிகள் சில திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி திருநெல்வேலியிலுள்ள மாஞ்சோலைவீதி, கலாசாலை ,வீதி முத்துத் தம்பி முன் ஒழுங்கை, பனிக்கர் வீதி கொக்குவிலுள்ள கலட்டி முற்தல் வீதி, கள்ளப் பிராய்வீதி ,பொற்பதி குறுக்குவீதி, வண்ணார் பண்ணை, ஆறுகால் மடம் வீதி ஆகியன 4.35 மில்லியன் செலவில் திருத்தப்பட்டுள்ளது. (6-30)

## சிவபூமி முதியோர் இல்லத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சிவபூமி முதியோர் இல்லத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு பாலச்சந்திரன் அரங்கில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக இலங்கை சர்வதேச அபிவிருத்திக்கும் புணர்நிர்மாணத்துக்குமான நிறுவன சுகாதார இணைப்பாளர் வைத்திய கலாநிதி நாச்சினார்க்கினியன் தம்பதிகள் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்புவிருந்தினராக யாழ் பல்கலைக் கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் சி.குமாரவடிவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவர்களின் கலைநிகழ்வுகளும், திருமுறைப் பாராயணம், வடிவுடைமூப்பு என்னும் விடயம் பற்றிய கவியரங்கு, மூத்தோரை மதிப்பதில் உன்னத மதிப்புக் கொடுத்த காப்பியங்களில் பெரிதும் முக்கியத்துவம் பெறுவது மகாபாரதமா என்னும் பட்டிமன்றமும் பொன்னாலை சந்திர பரத கலாலயம் மாணவிகளின் நாட்டியாஞ்சலி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மாணவர்களின் ஆர் அறிவார் நாடகமும் இடம்பெறவுள்ளது. (6-4)

அனைவரையும் அழைக்கிறோம்

# JAFFNA International TRADE FAIR 2010

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010

2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

## காட்சியாளர்களின் பட்டியல்

| நிறுவனம் | சாவடி இல. |
|---|---|
| ஏ.பி.ஜ. மெஷினரி (பிறைவேட்) லிமிட்டட் | A57 |
| எயிற்கின் ஸ்பென்ஸ் லொஜிஸ்டிக்ஸ் | G1 |
| அலுமெக்ஸ் குருப் | A93 |
| ஏசியன் சில் இக்விப்மன்ற்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B35 |
| அவீவா NDB இன்சூரன்ஸ் பொலிசி பி.எல்.சி. | A125, A126 |
| பச்சோ றீல்ஸ் அன்ட் சோஸ் | A158 |
| பைரஹா ஃபாம்ஸ் பி.எல்.சி. | A123. A124 |
| பெஸ்ட் சீட்ஸ் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | A118 |
| பூமி டெக் (பிறைவேட்) லிமிட்டட் | B65 |
| பயோ எக்ஸ்ட்ரக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| புழுஸ்கோப் லைசாட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | A4 |
| புத்திக்க பிறஷஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B17 |
| சீ. டி. டீ பொன்சேகா அன்ட் சன்ஸ் கம்பனி லிமிட்டட் | B49, B50, B51 |
| செல்சியஸ் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A6 |
| சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டட் | A55, B69 |
| சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டட் | B44 |
| இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் | A83 |
| சிலோன் டிடேர்ஜன்ற்ஸ் சப்ளையர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B47 |
| ஷெவ்ரோன் லூப்ரிகன்ற்ஸ் லங்கா பி.எல்.சி. | B152 |
| CIC அக்ரி பிஸ்னஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A27, B62, B63, B64 |
| CMC எஞ்ஜினியரிங் எக்ஸ்போர்ட் GmbH | A75 |
| கொலோன்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | D161 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை | B15 |
| கொழும்பு ட்ரேடிங் சென்டர் (பிறைவேட்) லிமிட்டட் | B34 |
| கிறிஸ்டல் பெக் (பிறைவேட்) லிமிட்டட் | A12 |
| டேவ் ட்ரக்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B43 |
| டேவிட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டட் | G3 |
| டெல்மேஜ் கம்பனிகளின் குழுமம் | B37, B38 |
| டீசல் அன்ட் மோட்டோர் எஞ்ஜினியரிங் பி.எல்.சி. | A94, A95 |
| டீவெல்கோ (பிறைவேட்) லிமிட்டட் | A79 |
| எடின்பரோ புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B22 |
| எட்னா எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A117 |
| எலீற் ரேடியோ அன்ட் எஞ்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | A58, A59 |
| யூரோ டைல்ஸ் | A61 |
| எக்ஸ்போ லங்கா டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | D163 |
| குளோபல் டெக் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A127 |
| குட் வல்யூ ஈஸ்வரன் (பிறைவேட்) லிமிட்டட் | B31 |
| H.E. எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A11 |
| ஹெலமான் வேர்ல்ட்வைட் லொஜிஸ்டிக்ஸ் | D159 |
| ஹெரட்டிகொட இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B67 |
| ஹேவாஸ் கிரபிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A1, A2 |
| HSBC | A84, A85, A86 |
| எச்செனிட் பிஸ்னஸ் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A52 |
| ஹியூபர்ட் என். அன்ரனி அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A24 |
| ஹன்டர் அன்ட் கம்பனி பி.எல்.சி. | A7 |
| ஹச்சிசன் ரெலிகொம்யூனிகேஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | B154 |
| HVA ஃபூட் (பிறைவேட்) லிமிட்டட் | B39 |
| இலுக்கும்புர இன்டஸ்ட்ரியல் ஓட்டோமேஷன் | 146 |
| இன்டர்நஷனல் கொன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோர்டியம் (பிறைவேட்) லிமிட்டட் | A26 |
| ஜினசேன (பிறைவேட்) லிமிட்டட் | B41, B42 |
| கமால் PVC இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | D165 |
| களனி கேபிள்ஸ் பி.எல்.சி. | A53 |
| கென் றீல்ஸ் அன்ட் மெஷினரிஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | 77 |
| கெவில்டன் இலெக்ட்ரிக்கல் புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A131, A132 |
| கிடீஸ் அன்ட் டோய்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | C156 |
| கூல்ஏயார் (பிறைவேட்) லிமிட்டட் | C174, C175 |
| கிரிஷோ மல்டி ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A145 |
| கூனே + நாகிள் (பிறைவேட்) லிமிட்டட் | A119 |
| L & S எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B149 |
| லலன் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B70 |
| லலன் பிரின்டிங் அன்ட் பக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டட் | A8 |
| லலங்கா எஞ்ஜினியரிங் கம்பனி | |
| லலன் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A147 |
| லங்கா கணரீஸ் லிமிட்டட் | D168 |
| லங்கா பொலிமர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A25 |
| லங்காலோகஹ ஹாட்வெயார் லிமிட்டட் | A5 |
| லங்கெம் பெயின்ற்ஸ் லிமிட்டட் | 134 |
| லைஃப் இன்சூரன்ஸ் கோப்பரேஷன் லங்கா | A97 |
| M. C. அப்துல் ரஹீம் அன்ட் பிறதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B13 |
| M/S ஜயசர என்டர்பிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B45 |
| மெக்போடன் | B71 |
| மெக்பிளை இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A10 |
| மெக்சன் மெஷ் இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A74 |
| மாஸ் ட்ரொப்பிக்கல் ஃபூட் புறோசெசிங் (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| மீடியா சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B178 |
| மெகா ஃபார்மா (பிறைவேட்) லிமிட்டட் | A90 |
| மைகிரேஷன் லோயர்ஸ் | D164 |
| மொடிகொன் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B16 |
| N.S. ஜெனரல் ட்ரேடிங் கம்பனி | D162 |
| நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் லிமிட்டட் | B135, B136 |
| நியூ ஜீவா இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A128 |
| Ni-Cey இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | B46 |
| ஒமேகா எஞ்ஜினியரிங் அன்ட் எஸ்.எஸ். ஃபப்ரிகேட்டர்ஸ் | A144 |
| ஒனெஷ் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டட் | B48 |
| ஓரெல் சொலூஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A92 |
| பேப்பர்கொம் ட்ரேடர்ஸ் | B155 |
| பென்ற்ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B148 |
| ஃபோட்டேப டெக்னிகா (பிறைவேட்) லிமிட்டட் | A78 |
| பிரமல் கிளாஸ் சிலோன் பி.எல்.சி. | A54 |
| பொலிடைம் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | A133 |
| புரொமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி இன்டஸ்ட்ரியல் ஸ்ரெயின்லஸ் ஸ்டீல் ஃபப்ரிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | C169-172 |
| புவக்கரம்ப ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A121, A122 |
| R.S.L. செரமிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A120 |
| ரேன்கோ (பிறைவேட்) லிமிட்டட் | B21 |
| ரேன்கோ பிறைவேட் லிமிட்டட் (கோப்பரேட்) | A60 |
| ரன்கி எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | C173 |
| ரேணுகா அக்ரிஃபூட்ஸ் பி.எல்.சி. | B36 |
| றைனோ ரூபிங் புரடக்ட்ஸ் லிமிட்டட் | A76 |
| RN கம்பனிகளின் குழுமம் | A56 |
| ரோச் எஞ்ஜினியரிங் லிமிட்டட் | A89 |
| ரோஷ்னி ட்ரேட் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | B150, B151 |
| ரொட்டக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A87, A88 |
| S.M.S. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B23 |
| சம்சன் இன்டர்நஷனல் பி.எல்.சி. | B32 |
| சம்சன் ரஜரட்ட டைல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A82 |
| சமுதி கம்பனிகளின் குழுமம் | B66 |
| ஷோ வொலஸ் மார்கட்டிங் | B36 |
| சாந்தி பிளாஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B33 |
| ஷெரீப் பிறதர்ஸ் (இறக்குமதிகள்) | A157 |
| சிலிக்கன் கோட்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A129, A130 |
| சின்சியரிட்டி செரமிக் (பிறைவேட்) லிமிட்டட் | A29, A3 |
| ஸ்பீட் வோட்டர் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | D167 |
| ஸ்டபர்ட் மோட்டோர் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | G2 |
| ஸ்டார்லைன் என்டர்பிறைசஸ் | B47 |
| சுமகா ஏன்டர்பிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A80 |
| சுரேன் குக் ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B20 |
| சுவீடிஷ் ட்ரேடிங் ஓடியோ விஷுவல் (பிறைவேட்) லிமிட்டட் | A96 |
| T.C.I.என்டர்பிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A143 |
| த்டாக்கே (பிறைவேட்) லிமிட்டட் | B40 |
| த ட்ரேட்ஸ்மான் SL (பிறைவேட்) லிமிட்டட் | B179 |
| திரெட் வேர்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A72 |
| ட்ரான்ஸ் கொன்டினன்டல் பக்கேஜிங் அன்ட் கொமோடிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| ட்ரு வல்யூ புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B18, B19 |
| யுனிலீவர் ஸ்ரீலங்கா லிமிட்டட் | B177 |
| யுனிடெக் எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | A91 |
| யுனைட்டட் ட்ரக்டர் அன்ட் இக்விப்மன்ற் (பிறைவேட்) லிமிட்டட் | B14 |
| யுனிட்டி ட்ரேடிங் கம்பனி | G4 |
| யுனிட்டி ட்ரேடிங் கம்பனி | B49, B50, B51 |
| உசாமா எஞ்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் | B153 |
| V.V. கருணாரத்ன அன்ட் கம்பனி | A73 |
| வாயு (பிறைவேட்) லிமிட்டட் | D166 |
| வெஸ்ட்மான் எஞ்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | B49, B50, B51 |
| விஜய புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A3 |
| டீன் பிறதர்ஸ் இம்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | B9 |
| IDM கொம்பியூட்டர் ஸ்டடீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | C176 |
| கன்ட்ரி ஸ்டைல் ஃபூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | |
| கெப் ஸ்னெப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | A28 |
| ஸ்ரீலங்கா ரெலிகொம் மொபிடெல் | |
| ஸ்பீட் வோட்டர் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | |

### CCIY பவிலியன்

| | |
|---|---|
| "தவம்ஜா" எஞ்ஜினியரிங் வேர்க்ஸ் | A114 |
| அண்ணா இன்டஸ்ட்ரி | A109 |
| பிஸ்னஸ் நெட்வேர்க் சொலூஷன்ஸ் - BNS | A110 - B |
| கொவே ஷ | A115 - A |
| ஜச்சுபி ஃபுருட் பேஸ்ட் பக்டரி | A110 - A |
| K.T.M ஒயில் மில் | A115 - C |
| நியூ லங்கா ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A113 |
| சங்கமம் சிறுகைத்தொழில்கள் (தனியார்) நிறுவனம் | A108 |
| சிவன் மாளிகை லிமிட்டட் | A107 |
| ஸ்டார் இன்டஸ்ட்ரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | A106 |
| திருமுருகன் கொம்நெட் | A104, A105 |
| வெஸ்டா இன்டஸ்ட்ரீஸ் | A116 |

## சித்தாரா மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சி

நவநாகரிகக் காட்சி / கைத்தொழில் கருத்தரங்குகள்
முதலீட்டு அரங்கம் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

ORGANISED BY:
LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
A member of SAES SOUTH ASIA EXHIBITION SERVICES network

FOR INFORMATION CONTACT:
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mawatha, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563 E-mail: rizwan@saexhibitions.com
www.saexhibitions.com/jitf

IN ASSOCIATION WITH: CCIY
JOINTLY ORGANISED BY: FCCISL
SUPPORTED BY: SRI LANKA CONVENTION BUREAU
SPONSOR: Sri Lanka Telecom Mobitel We Care. Always.
PARTNER COUNTRY: INDIA
OFFICIAL PRINT MEDIA: சுடர் ஒளி
OFFICIAL RADIO: வெற்றி

# முல்லைத்தீவின் 5 கிராம சேவகர் பிரிவுகளில் மக்களை மீள்குடியேற்றும் பணிகள் துரிதம்

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா நிவாரணக் கிராமங்களில் எஞ்சியுள்ளவர்களை மீளக்குடியேற்றும் பணிகளை துரிதப்படுத்துவதற்கான சகலஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக வவுனியா அரசாங்க அ:திபர் திருமதி. சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நேற்று முல்லைத்தீவு நகரில் 1200 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள அதேவேளை நாளை 1300 பேர் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை நண்பர்கள்,உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தவர்களை எதிர்வரும் 20,22 ஆம் திகதிகளில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த திட்டமிட்டிருப்பதாகவும் இதற்கமைய அவர்களது தகவல்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நகரிலுள்ள முள்ளியவளைமத்தி, கள்ளப்பாடு, வண்ணான்குளம், உன்னாப்பிளவு, கரச்சிக்குடியிருப்பு ஆகிய ஐந்து கிராமசேவகர் பிரிவுகளிலேயே இவர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர். பொதுத் தேர்தலைத் தொடர்ந்து மீள்குடியேற்றும் பணிகள் மீண்டும் துரிதப்படுத்தப்படுகின்றது.

முல்லைதீவு நகரிலுள்ள மேற்படி ஐந்து கிராம சேவகர் பிரிவுகளிலும் நிலக்கண்ணி வெடிகள் முழுவதும் அகற்றப்பட்டு, அவை மீள்குடியேற்றத்துக்கு ஏற்ற வகையில் தயார் செய்யப்பட்டதையடுத்தே அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பாதாக முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்போரை எதிர்வரும் 20,22 ஆம் திகதிகளில் முல்லைத்தீவின் மேற்படி ஐந்து கிராம கிராம சேவகர் பிரிவுகளிலும் மீளக்குடியமர்த்த தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் அவர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நிலக்கண்ணி வெடிகள் முழுமையாக அகற்றப்பட்டிருக்கும் மேற்படி ஐந்து கிராம சேவகர் பிரிவுகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கமநெகும வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாகவும் சேதமடைந்த வீடுகளை கட்டுவதற்கு பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முன்வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா நிவாரணக் கிராமத்தில் மீளக்குடிமர்த்தப்படுவதற்காக இன்னமும் 80 ஆயிரத்து 669 பேர் இருப்பதாகவும் குறுகிய காலத்துக்குள் இவர்கள் அனைவரையும் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் சார்ள்ஸ் மேலும் தெரிவித்தார். (6)

# தெமட்டகொடயில் துப்பாக்கிச்சூடு

தெமட்டகொட ஸ்ரீ தர்மாராம வீதியின் காளியபுள்ளவத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காயமடைந்தவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (6)

# கிழக்கு,ஊவாமாகாண மாணவரிடையே தமிழ்மொழி மேம்படுத்தல் நடவடிக்கை

(கொழும்பு)

கிழக்கு மற்றும் ஊவா மாகாணப் பாடசாலைகளில் தமிழ்மொழிப் பாடத்துறையினை மேம்படுத்துவதற்குக் கல்வியமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ் மொழி பாட போதனையின் போது தற்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் பாடத்துறையினை விருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண மற்றும் வலயங்களின் தமிழ் மொழிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாகக் கல்வியமைச்சின் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பாடசாலை நூலகங்களைத் தமிழ் மொழி விருத்திக்காகப் பயன்படுத்துதல் , மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்தல், தமிழ் மொழி மற்றும் இலக்கியச் செயற்பாடுகள் என்பவை தொடர்பாக இந்தக் கூட்டத்தின் போது ஆராயப்படவுள்ளது.

க.பொ.த உயர்தர மாணவர்கள் தமிழ் மொழியைத் தெரிவுசெய்யும் முறைபற்றியும், தமிழ்மொழித் தினப் போட்டி நிகழ்ச்சிகளில் பாடசாலைகளின் பங்களிப்பினை அதிகரிப்பது தொடர்பாகவும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. (6)

# பாடசாலை மாணவர்களுக்கான கணனிமென்பொருள் ஆக்கப்போட்டி

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் கணனி மென்பொருள் ஆக்கப் போட்டித் தொடரினை இந்த ஆண்டிலும் நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

கணனி தகவல் தொழில் நுட்பத்துறையில் பாடசாலை சமூகத்தினரின் ஆர்வத்தை மேம்படுத்தி புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த கணனி மென்பொருள் போட்டி நடத்தப்படுவதாக கல்வியமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளர் அனுர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் கற்றல் , கற்பித்தல் சாதனமாக கணனிகளைப் பயன்படுத்தி நாட்டின் கல்வித் துறையில் கணனிகளின் உபயோகத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்ப வகுப்பு முதல் தரம் -13 வரையான வகுப்பு மாணவர்களும் பங்குபற்றும் வகையில் இரு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன் ஆசிரியர்களுக்கான போட்டியும் 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

பாடசாலை ரீதியாகவும் மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் சிறந்த கணனி மென்பொருள் ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போட்டியில் பங்குபற்றும் அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பெறுமதிமிக்க அரச சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கணனி மென்பொருள் ஆக்கப் போட்டிக்குரிய படைப்புகள் யாவும் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண செயற்றிட்ட அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.(6)

# அநுராதபுரத்தில் இரு கிராம மக்களுக்கு இடையில் மோதல்

(கொழும்பு)

அநுராதபுரத்தில் நேற்று நண்பகல் இரு கிராம மக்களுக்கு இடையில் மோதலொன்று இடம்பெற்றுள்ளது.

நொச்சியாகம றனோறாவ மற்றும் நிக்கத்துனவெவ ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு இடையிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் அதே வேளை தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த மோதலின்போது பல வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# 600 பேருக்கு புதிதாக கேபிள் இணைப்புகள்

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் யாழ். மாவட்டத்தில் தமது சேவையை மேலும் விஸ்தரித்து வருகிறது. அதன் ஓர் அங்கமாகவே சாவகச்சேரி,சித்தங்கேணி,மானிப்பாய் ஆகிய பகுதிகளில் பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரிவர்த்தனை நிலையங்களை அண்மித்த பகுதியில் 600 பாவனையாளர்களுக்கு கேபிள் தொலைத்தொடர்பு இணைப்புக்களை வழங்கவுள்ளன. (6)

# இலங்கையில் சுமூகமான சூழ்நிலை நிலவுவதால் அகதி அந்தஸ்து வழங்க வேண்டிய அவசியமில்லை

## அவுஸ்.பிரதமர் தெரிவிப்பு

இலங்கையில் சமாதானமான சூழ்நிலை காணப்படுகின்ற நிலையில் இலங்கை தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்க வேண்டிய அவசியம் இல்லை என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவுஸ்திரேலிய பிரதமர் கெவின்ரூட் இதனை தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிலும்,இலங்கையிலும் தற்போதும் யுத்தம் குறைவடைந்து சுமூக நிலை தோன்றி வருகிறது.

இந்த நிலையில் அவர்கள் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிக்கும் போது, இது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் அகதி அந்தஸ்து வழங்கல் தொடர்பிலான கொள்கை மாற்றும் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் முழு கொள்கையும் மாற்றி அமைக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நிரபராதியான அகதிகள் என அடையாளம் காணப்படாத பட்சத்தில் அவர்களின் அந்தஸ்து மனு நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் தற்போது நிறைவடைந்துள்ளது. அண்மையிலேயே இலங்கையில் பொதுத்தேர்தலும் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபிரதேசங்கள் தற்போது மீட்சி கண்டு வருகின்றன.

எனினும் நாட்டின் ஏனைய பாகங்கள் இயல்பு நிலையில் காணப்படுகின்றன. எனவே இலங்கை அகதிகளுக்கு அந்தஸ்து வழங்கும் போது அவர்கள் வரும் பிரதேசங்கள் தொடர்பிலும் பரிசீலிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (4-6)

# ஒருவருடகாலத்தில் ஐ.தே.கட்சி சிறந்த முறையில் மறுசீரமைக்கப்படும்

## ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியை ஒருவருட காலத்தில் முழுமையாக மறுசீரமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம். பல்வேறுமட்டங்களில் கட்சியை மறுசீரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று ஐ.தே.க.வின் உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த செயற்பாடுகள் குறித்து ரவி கருணாநாயக்க மேலும் கூறியதாவது,

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு சிறந்த முறையில் முகம் கொடுக்கும் வகையில் ஐக்கிய் தேசியக் கட்சியை மறுசீரமைக்க நவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் இன்னும் சில காலத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்காக எமது கட்சியை சிறந்தமுறையில் தயார்ப்படுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது.

எனவே ஒருவருட காலத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சியை சிறந்த முறையில் மறுசீரமைக்க எதிர்பார்க்கின்றோம். மறுசீரமைப்பு செயற்பாடுகள் பல மட்டங்களில் மற்றும் பல முறைகளில் நடைபெறும்.


முக்கியமாக திறமையான தொகுதி அமைப்பாளர்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட சந்தர்ப்பம் வழங்கப்படும். எனினும் திறமையற்ற அமைப்பாளர்களுக்குபதிலாக திறமையுள்ள புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மேலும் கிராம மட்டத்திலிருந்து கட்சியைக் கட்டியெழுப்பவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகள் இதனை எமக்கு உணர்த்துகின்றன. எனவே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

தற்போதைய நிலைமையில் பாராளு மன்றத்தில் ஐக்கியதேசிய முன்னணி பலமான எதிர்க்கட்சியாக செயற்படும். இதேவேளை எதிர்வரும் தேர்தல்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் கட்சியை தயார்ப்படுத்துவோம். (6-4)

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்

10-XIII



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

### எலிகள்

நெற்பயிரை வயலில் சேதமாக்கும் பூச்சி பீடைகளைப் பற்றி பார்த்தோம். பூச்சியினம் தவிர்ந்த பாலூட்டிகளில் ஒன்றான எலிகளின் சேதமும் வயலில் அதிகம். கவனிப்பாரற்று கிடக்கும் வயல்களிலேயே எலிகளின் தொல்லைகள் அதிகரித்தும் அவற்றினாலேற்படும் சேதங்களும் கணக்கிலடங்காத அளவில் அதிகரித்தும் இருக்கிறது.

இவ்வாறான வயல் எலிகளினால் நெற்பயிர் வெட்டி சேதமாக்கப்படுவதனால் விளைச்சலினை நேரடியாகவே பெருமளவில் பாதிக்கின்றன. தகுந்த கவனிப்பும், கண்காணிப்பும் இல்லாத நெல் வயல்களில் எலிகள் வளையமைத்து இலகுவாக இனம் பெருக்கி இறுதியில் கணிசமானளவு அழிவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன.

பொதுவாகவே வயல் எலிகள் வளைகளை வயலினுடைய வரப்புகளிலே அமைக்கும். வளைகளின் வாயிற்பகுதி வரப்பிலேயுள்ள உயரமான பகுதியிலமையும். வயலினுள் நீர்மட்டம் ஏறினாலும் தமது வளை பாதிக்கப் படாதவாறு இவற்றின் வளையின் வாயில் அமைந்திருப்பது விசேட அம்சமாகும்.

எலிவளையானாலும் தனிவளை வேண்டும் என்பார்கள். அதுபோல வயல் எலிகள் தனி வளையாகவே தமது வளைகளை அமைத்துக் கொள்ளுகின்றன. இந்த வளையினுள் வயலில் வெட்டியெடுத்த கதிர்களை இழுத்து வந்து சேமித்து வைக்கும். சேமிக்கும் பழக்கம் ஐந்தறிவு ஜீவன்களிலும் காணப் படுவதற்கு இதுவும் உதாரணமாகும்.

வயல்களில் எலிகளால் வெளித்தள்ளப் பட்ட புதிய மண் மற்றும் எச்சங்களை வைத்துக் கொண்டு எலிகள் இன்னும் வளையினுள்ளே இருப்பதனை உறுதிசெய்து கொள்ளலாம். தனது குட்டிகளை வளையினுள் வைத்து பராமரிக்கும் தாய்மையின் சிறப்புக்களையும், பெற்றோரின் கவனிப்பு (Parental Care) என்பனவற்றையும் அவதானிக்கலாம்.



வயல் எலி


பொதுவாகவே எலிகளினது பற்கள் தொடர்ச்சியாகவே வளர்ந்து கொண்டிருக்கும். இதன் காரணமாக வளரும் பற்களை வளரவிடாது பாதுகாக்க எலிகள் பற்களின் மூலம் வெட்டுவதால் எதிர்பார்த்ததை விட அதிகமான சேதத்தையை ஏற்படுத்தும். எலிகளினால் சேதமாக்கப்பட்ட நெற்பயிர்களை அறுவடை செய்யவோ அதிலிருந்து நெல்லை பிரித்தெடுக்கவோ முடியாதிருக்கும்.

எண்ணிக்கை கட்டுக்கடங்காது போய் விட்டால் எதுவுமே செய்ய முடியாது. இதனால் ஆரம்பத்திலேயே எலிகளின் வளைகளை அவதானித்து இயன்றவரை அழித்து விடுதல் நல்லது. எலிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதனை வளைகளின் வாயிலின் வெளியே தள்ளப்படும் புதிய மண்ணினையும் அவற்றின் எச்சங்களையும் அவதானிப்பதன் மூலம் கண்டறிந்து கொள்ளலாம்.

### வயல் எலி

வயல் எலிகளை பண்டிகோட்டா பெங்கலான்சிசு என அழைப்பர். இவை அடர் மண்ணிற நிறத்துடன் வெளிறிய வெள்ளை நிற வயிற்றுப் பாகத்தையும் கொண்டிருக்கும். தலையும் உடலுமாக 15-23 செ. மீ நீளமுடையதுடன் இதனது வால் 15-18 செ.மீ நீளமுடையது. பெரிய வளைகளை உருவாக்கும் இவ் எலிகள் மண்ணினுள் 1-1.5 மீற்றர் ஆழம் வரை வளைகளை அமைக்கும் என்றால் பாருங்களேன்.

இவற்றினது வளைகளில் 4-5 வாய்ப் பகுதி இருக்கும். அத்துடன் இவ்எலிகள் உருவாக்கும் வளைகளுள் படுக்கையறை, இனப் பெருக்கம் அறை மற்றும் உணவு சேமிக்கும் அறை என பிரிவுகள் இருக்கின்றனவென்றால் அதிசயமாக இல்லையா. தனித்தே வளைகளில் இருப்பினும் இனப்பெருக்க காலத்தில் சேர்ந்திருக்கும்.



சுண்டெலி

ஒரு வருடத்தில் மூன்று தடவைகள் குட்டியீனும் இவ் எலிகள் 2-18 வரை குட்டிகளை ஈனும் வல்லமையுடையது. நெற் கதிர்களை இலாவகமாக வெட்டி இழுத்து வந்து வளைக்குள் சேமித்து வைக்கும் பாங்கே தனி. ஒரு வளைக்குள் 2 கிலோ அளவுக்கு நெல் மணிகள் சேமித்து வைத்திருக்கும்.

### சுண்டெலி

இதனைப் போன்று சுண்டெலி அல்லது சிறு எலி (Mus sp) 5 -8 செ.மீ நீளமுடையதுடன் வால்பகுதி 5. செ.மீ நீளமானதாகும். மண்ணிற நிறமுடைய இவ் எலியின் வயிற்றுப்பகுதி வெள்ளையாகவிருக்கும். குறும்புக்கார இச்சிறு எலிகள் வரம்பில் வளையமைத்து இறுதியில் வரம்பினை சிதைத்து விடும். இதனால் நீரை தேக்க முடியாதிருக்கும். நெல் மணிகளை வெட்டியெடுத்து உணவாக கொள்ளும்.

எலிகளை ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளூடாகவே சிறப்பாக கட்டுப்படுத்த முடியும். அனைத்து விவசாயிகளும் இதில் ஒன்றிணைவது அவசியம். வரப்பினை சீர் செய்வதும் வளைகள் தென்பட்டால் அழித்து விடுவதும் அவசியம்.

ஒவ்வொரு முறையும் வயலை பண்படுத்தும் போது வரப்பினை சீர்செய்து புற்கள் இல்லாதவாறு செப்பனிடுதல் வேண்டும்.

வளைகளுக்குள் பொஸ்பீன் வில்லைகளையிட்டு வாயில் பகுதியை இறுக்கமாக மூடி உள்ளுள்ள எலிகளை அழித்துவிடலாம். அதே வேளையில் உணவு மூலம் நஞ்சாக்கல் பொறிமுறையில் நாகபொஸ்பெட்டு இனை வைத்து கவர்ந்திழுத்தும் அழிக்கலாம். இவையனைத்தும் நச்சுப் பொருட்களாதலினால் சிறுவர் கைகளில் கிடைக்காதவாறு பார்த்துக் கொள்ளுதலும் அவசியம். (தொடரும்)

## இணையம் ஊடாக கப்பம் கோரி அச்சுறுத்தல் விடுத்த இலங்கை பொறியியலாளர் கைதானார்

(கொழும்பு)

இணையத்தின் ஊடாக இலங்கையின் பெண் பொறியியலாளர் ஒருவரிடம் இலட்சக் கணக்கில் கப்பம் கோரி அச்சுறுத்தல் விடுத்த குவைத்தில்பணியாற்றியமற்றுமொரு இலங்கை பொறியியலாளர் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இணையத்தளம் ஊடாக கப்பம் கோரி அச்சுறுத்தல் விடுத்த சம்பவமானது இலங்கையில் நடைபெற்றுள்ள முதலாவது சம்பவமாகும் என இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குவைத் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அங்கிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதை அடுத்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் பொறியிலாளரின் நிர்வாணப் புகைப்படம் தன்னிடம் இருப்பதாகவும் அதனை இணையத்தளங்களில் வெளியிடாது இருக்க வேண்டுமாயின் 5 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்து குறித்த பொறியியலாளர் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

கப்பப் பணம் இலங்கை ரூபாவில் இலங்கையின் வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட வேண்டும் என குறித்த பொறியிலாளர் தெரிவித்திருந்ததாக இரகசிய பொலிசார் கூறியுள்ளனர். சம்பந்தப்பட்ட பெண் பொறியிலாளர் கொழும்பில் உள்ள தனியார் வங்கியொன்றில் 55 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டுள்ளார்.

இந்த நிலையில் தொடர்ந்தும் கப்பம் கோரி மின்னஞ்சல் மூலம் அச்சுறுத்தல் விடுத்ததையடுத்து பெண் பொறியிலாளர் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிசார் பொறியிலாளர் பணம் வைப்புச் செய்த வங்கிக் கணக்கின் உரிமையாளரை கைதுசெய்துள்ளனர். இந்த கப்பம் பெறும் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளரின் சகோதரர் ஒருவரும் பின்னர் கைதுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து குவைத்தில் உள்ள பொறியியலாளர் குறித்த தகவல்களை சர்வதேச பொலிசார் ஊடாக குவைத் பொலிசாருக்கு தெரியப்படுத்துப்பட்டது. இதனையடுத்து குவைத் பொலிசார் சந்தேக நபரை கைதுசெய்து நாடு கடத்தினார். இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யபட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர். (6)

## வீதிக்குக் குறுக்கே ஓடிய சிறுவன் விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கடைக்கு சென்று விட்டு வீடு திரும்புவதற்காக வீதிக்குக் குறுக்காக ஓடிய சிறுவனை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

நேற்று முன்தினம்காலை 9மணியளவில் யாழ் இராசாவின் தோட்டம் பகுதியில் இடம் பெற்ற இவ்விபத்தில் அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த த.நிக்ஷன் (வயது07) என்ற சிறுவனே தலையில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின்அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளான். (6-30)

## மஹிந்தானந்த அளுத்கமவிடம் 50 மில். நஷ்டஈடு கோரி கடிதம்

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவிற்கு எதிராக 50 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு கோரி கடிதமொன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சரத் காமினி ஹெட்டியாராய்ச்சி அனுப்பி வைத்துள்ளார்.

மஹிந்தானந்த அளுத்கமவினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் அரசியல் வாழ்க்கைக்கு இடையூறு விளைவித்தமை ஆகியவற்றுக்கு எதிராக 14 நாட்களுக்குள் பணம் தருமாறு கோரியே காமினி ஹெட்டியாராச்சி இக் கடிதத்தை அனுப்பி வைத்தார். (6)

# விகிர்தி வருடம் உங்களுக்கு எப்படி?

## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் வரை)

**புதுமை செய்வதிலும், புரட்சி செய்வதிலும் புகழ்க்கொடி நாட்டும் மிதுன ராசி நேயர்களே!**

பிறக்கும் புத்தாண்டில் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து, புதியவழி பிறக்கப்போகிறது. அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தில் இருந்த உங்களுக்கு குருபார்வை கைகொடுக்கப் போகிறது.

இனம்புரியாத கவலைக்கும் மனக் குழப்பத்திற்கும் இடையில் தவித்துக் கொண்டிருந்த உங்களுக்கு விரோதிகள் விலகி, வெற்றிச் செய்திகள் வீடு நோக்கி வரப்போகின்றன. காரணம் தனாதிபதி 10 இல் சஞ்சரித்து வருடம் தொடங்குகிறது. தக்க விதத்தில் குருவின் பார்வையும் உங்கள் ராசியில் பதிகிறது.

சித்திரை 19 ஆம் திகதி 10 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கப்போகிறார். இதனால் பதவி மாற்றம், இடமாற்றம், ஊர்மாற்றங்கள் உருவாகலாம். சுய ஜாதகத்தில் குரு பலம் பெற்றிருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை.

ஐப்பசி 21 முதல் கார்த்திகை 4 வரை குருவின் வக்ர காலத்தில் குடும்பத்தில் நல்ல சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். செவ்வாய் உச்சம் பெறும் நேரத்தில் விபரீத ராஜ யோகம் செயல்படுவதால் பூமியோகம் கிட்டும்.

இராசிநாதனாக புதன் விளங்குவதால் இனிக்க, இனிக்கப் பேசுவீர்கள். இயல்பாகவே தெய்வ பக்தி உங்களிடம் இருக்கும். மனக் குறைகளை மற்றவர்கள் சொன்னால் அதைக் கேட்டுக் கொள்வீர்கள்.

இரட்டிப்பு சிந்தனை உங்களுக்கு உண்டு. எதையும் செய்வோமா, வேண்டாமா என்ற எண்ணத்திலேயே இருப்பீர்கள். சிறிய துன்பங்களைக் கூட பொறுத்துக் கொள்ள இயலாது.

உங்கள் கையில் காசு தங்குவது அரிது. வலியச் சென்று உதவுவீர்கள். வளர்ச்சி வரும் நேரத்தில் முன் கோபமும் அதிகரிக்கும். கோபத்தைக் குறைத்துக் கொண்டால் ஆபத்தில் இருந்து தப்பிக்கலாம். உங்கள் தேக நலனைக் காட்டிலும் உடன் இருப்பவர்களின் தேகநலனுக்கே முக்கியத்துவம் கொடுப்பீர்கள். கூட்டு முயற்சியே உங்களுக்கு வெற்றி தரும்.

புதனின் பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை எப்படி அமையும் என்பதை எடை போடலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றவும், கொள்கைப் பிடிப்புடன் செயல்படவும் புதன் மற்றும் சுக்ரனின் பலம் தான் சுய ஜாதகத்தில் கைகொடுக்க வேண்டும். குருவின் நிலையறிந்து பொருத்தம் பார்த்து வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்தால் குடும்ப ஒற்றுமை கூடும். குழந்தைப் பேறும் கிட்டும்.

உங்கள் சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகம் எது என்பதை ஆராய்ந்து பார்த்து அதன் பாதசார அடிப்படையில் கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால் வசதி வாய்ப்புகள் பெருகும்.

விகிர்தி ஆண்டு தொடங்கும் பொழுது உங்கள் இராசியில் கேது சஞ்சரிக்கிறார். எனவே ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். அடுக்கடுக்காக வரும் பிரச்சினைகளை அகற்றுவது ஆலய வழிபாடுதான்.

சப்தம ஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதால் குடும்பத்தினரை விட்டு ஒரு சிலர் தொழில் ரீதியாக விலகிச் செல்லும் சூழ்நிலையோ அல்லது படிப்பு ரீதியாகப் பயணிக்கும் சூழ்நிலையோ உருவாகலாம்.

இலாப ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்ரன் மூன்றும் இணைந்து செயல்பட்டு குரு பார்வையோடு தொடங்கும் புத்தாண்டில், பொருளாதார நிலை உயரும் என்றாலும் அர்த்தாஷ்டமச் சனியால் அடிக்கடி விரயங்கள் அதிகரிக்கும். மே மாதத்தில் அதிச்சாரமாக வரும் குரு சனியைப் பார்க்கும் வரை சற்றுப் பொறுமையாகச் செயல்படுவது நல்லது.

யோக பலம் பெற்ற நட்சத்திரத்தில் உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலத்தில் முறையாக இராகு-கேதுகளுக்குப் ப்ரீதியும் சர்ப்ப சாந்தியும் செய்தால் ஆண்டு முழுவதும் நற்பலன்கள் வந்து சேரும்.

மீனராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது 10 ஆம் இடமாக வருகிறது. 10 இல் குரு வந்தால் பதவிகள் மாறும் என்பது நியதி. அது நேரத்தில் குருவின் பார்வை 2,4,6 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன.

***பத்தினில் குருவும் வந்தால் பதவி தான் மாறும் என்பார்! அத்தகு நிலையில் கூட அனுகூலம் கிடைப்பதற்கும் சொத்துக்கள் சேர்வதற்கும் சுகமெல்லாம் கூடுவதற்கும் தக்கதோர் குருவை நீங்கள் தரிசித்தால் வளர்ச்சி கிட்டும்!***

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இதுவரை பதவி இல்லாதவர்களுக்கு இனி புதிய பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். குரு சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் உத்தியோகம், தொழில் உயர்வு கிடைக்கும். அரசு வழிச் சலுகைகளைப் பெற்று வீடு கட்டி குடியேறுவீர்கள். வங்கிக் கடனும் கிடைக்கும்.

ஜென்ம கேதுவும் ஏழாமிடத்து இராகுவும் சிறுசிறு சிக்கல்களை கொடுத்தாலும் நன்மைகளை குரு வரவழைத்துக் கொடுக்கும். கூட்டாளிகளிடம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டினாலும் அவர்கள் சரியான முறையில் நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம் தான். வியாபார போட்டிகளைச் சமாளிக்க நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும்.

இந்த ஆண்டு முழுவதும் நான்காமிடத்தில் தான் சனி சஞ்சரிக்கிறார். அஷ்டமத்துச் சனியில் பாதிப்பங்கு வலிமையுடையது அர்த்தாஷ்டமத்துச் சனியாகும்.

எனவே ஒவ்வொரு நாளும் விழிப்புணர்ச்சியுடன் செயல்பட்டால் தான் வளர்ச்சி கூடும். வழக்குகளை நீடித்துக் கொள்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். கருத்து வேறுபாடுகள் அதிகரிக்காமல் இருக்க பொறுமையைக் கையாள வேண்டிய நேரமிது.

வருடத் தொடக்கம் முதல் வைகாசி 12 வரை சனி வக்ரம் பெறுகிறார். மீண்டும் தை மாதம் 8 ஆம் திகதி முதல் பங்குனி 30 ஆம் திகதி வரை வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிக்கு 8 , 9 க்கு அதிபதியான சனி பகவான் வக்ரம் பெறுகிறார்.

அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது நன்மை தான். அதே நேரத்தில் ஒன்பதுக்கு அதிபதியாக சனி விளங்குவதால் பெற்றோர் வழியில் பிரச்சினைகள் ஏற்படலாம். பூர்வீக சொத்துக்களில் புது புதுப் பிரச்சினைகள் உருவாகும். ஊர் மாற்றங்களால் நிம்மதி குறையும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். பல பணிகள் பாதியிலேயே நிற்கலாம்.

எனவே சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் சந்தோஷங்களை நாளும் சந்திக்கலாம்.

ஆடி 5 ஆம் திகதி முதல் ஆவணி 20 ஆம் திகதி வரை கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அக்காலத்தில் மிகுந்த விழிப்புணர்ச்சி தேவை. வாகனத்தால் தொல்லைகளும், வளர்ச்சிக்கு இடையூறும் தோன்றும். தேக நலனில் திடீர்பாதிப்புகள் ஏற்படலாம்.

துர்க்கை வழிபாடு உங்கள் துயரங்களைப் போக்கும். அதே நேரத்தில் மார்கழி 22 ஆம் திகதி முதல் தை 29 ஆம் திகதி வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். 6 க்கு அதிபதி செவ்வாய் 8 இல் உச்சம் பெறுகிறார். இழப்புகளை ஈடுசெய்யும் காலமாக இக்காலம் அமையும். சொத்துக்களை வாங்கி இலாபம் காண்பீர்கள்.

சித்திரை 19 ஆம் திகதி (2.5.2010) முதல் ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி (6.11.2010) வரை மீன இராசியில் அதிச்சாரமாக குரு சஞ்சரிக்கப் போகிறார். ஐப்பசி 21 ஆம் திகதி (7.11.2010) முதல் கார்த்திகை 4 ஆம் திகதி (20.11.2010) வரை கும்ப ராசியில் குரு வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார்.

கார்த்திகை 5 ஆம் திகதி மீண்டும் மீன ராசியில் குரு முறையாகச் சஞ்சரிக்கப் போகிறார். இந்தப் பொன்னான குருவின் சஞ்சாரம் என்னென்ன மாற்றங்களை கொடுக்கப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

வருடத் தொடக்கத்தில் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். மூன்று, ஐந்து ஆகிய இடங்களில் குரு பார்வை பதிவதால் வழக்குகளில் வெற்றி கிட்டும். வாய்தாக்கள் ஓயும். கூடப்பிறந்தவர்களால் ஏற்பட்ட கூக்குரல்கள் மாறும்.

பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

உங்கள் இராசிக்கு 7, 10 க்கு அதிபதியாக குரு விளங்குவதால் மனைவி, மக்கள் வழியில் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். சொத்துக்களால் இலாபம் கிடைக்கும்.

புதன்கிழமை தோறும் விஷ்ணுவை வழிபட்டு வந்தால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். விகிர்தி ஆண்டில் நீங்கள் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே வியக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள

**சிவல்புரி சிங்காரம்**

இயலும். புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் எதிர்பார்த்தபடி நடைபெறும். உத்தியோகம், தொழிலில் உயர்வு கிடைக்க சுய ஜாதக ரீதியாக ஆராய்ந்து சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வது நல்லது. வருடக் கடைசியில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

(தொடரும்)

# இலங்கைத் தமிழ் பெண் அமெரிக்கத் தேர்தலில் போட்டி

இலங்கையைச் சேர்ந்த தமிழ் பெண் ஒருவர் அமெரிக்காவில் நடைபெறவுள்ள தேர்தல் ஒன்றில் போட்டியிட உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

சுமி கைலாசபதி என்ற யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பெண் ஒருவரே இவ்வாறு தேர்தலில் போட்டியிட உள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள 3 பிரைமரி தேர்தல்களில் குடியரசுக் கட்சி வேட்பாளர் சான்டி ஸ்மித்தை எதிர்த்து சுமி போட்டியிடவுள்ளார்.

சுமி கைலாசபதி அரசியல் விஞ்ஞானம் தொடர்பில் முதுமாணிப் பட்டமொன்றை பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1990 களில் அமெரிக்காவிற்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அமெரிக்காவின் ஆன் ஆர்பரில் வசித்து வரும் சுமி கைலாசபதி யாழ்ப்பாண பல்கலைக்கழக பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# அமைச்சரவை நியமனம் தொடர்பில் ஆளும் கட்சி புதிய உறுப்பினர்கள் சந்திப்பு

அமைச்சரவை நியமனம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாளை சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான அழைப்பு அனைத்து புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது புதிய அமைச்சரவை குறித்து உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (6)

## கடந்த பொதுத் தேர்தலில்

# கண்டி மாவட்டத்தில் பெருமளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

கண்டியில் ஆயிரக்கணக்கான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் வாக்களித்த அதிக அளவிலான பெருந்தோட்ட மக்கள் உரிய முறையில் வாக்களிக்கவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

கண்டி மாவட்டத்தில் மொத்தமாக 20 ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றில் பெரும்பாலான வாக்குகள் பெருந்தோட்ட மக்களினால் அளிக்கப்பட்டவை எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு எதிரே புள்ளடி இட்டதன் பின்னர், தமது விருப்பு வாக்குகளை சுயாதீன குழுக்களின் இலக்கங்களுக்கு எதிரே புள்ளடி இட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், கண்டி மாவட்டத்தின் நாவலப்பிட்டி தேர்தல் தொகுதி முடிபுகள் சூன்யமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரசியல் ஆர்வலர்களின் கருத்தின் அடிப்படையில் இத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏழு ஆசனங்களையும் ஐக்கிய தேசிய முன்னணி ஐந்து ஆசனங்களையும் பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (6)

# மட்டு.மாநகரசபை காவலாளிகள் இருவருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பில் விமானப்படையின் புலனாய்வுப் பிரிவினர் என ஏமாற்றிய மாநகரசபை காவலாளிகள் இருவர் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# வடக்கு – கிழக்கு பொருளாதார அபிவிருத்தி -II

### கோழி, கால் நடை வளர்ப்பு

கோழி கால்நடை வளர்ப்பு பெரிய அளவில் தொடங்குபவர்கள் நமது சீதோஷ்ண நிலைக்கு பொருத்தமான மிருகங்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இங்கும் சந்தைப் படுத்தலின் முக்கியத்துவம் பேணப்பட வேண்டும். பெரிய அளவில் கோழி வளர்ப்பவர்கள் சொந்த கோழித்தீன் ஆலையையும்



அமைக்கலாம். அத்தோடு பல சிறிய கோழி வளர்ப்பவர்களை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துப் பெரும்பலன் பெறலாம்.

சிறிய அளவில் ஒருவர் கோழி வளர்க்கும் போது கோழித்தீன் வாங்குவதில்இருந்து முட்டை விற்பது வரை அவரே செய்யும் போது அதிகம் இலாபம் பார்க்க முடியாது. மாறாக ஒரு தொழில் துணிபவர் பல சிறிய அளவிற் கோழி வளர்ப்பவர்களைச் சேர்த்து ஒப்பந்த முறையில் அவர்களுக்கு தேவையான அனைத்தையும் வழங்கி உற்பத்தியைப் பெற்று சந்தைப்படுத்தினால் அந்த அமைப்பு இரு சாராருக்கும் பெரு இலாபம் ஈட்டித்தரும்.

கால்நடை வளர்ப்பும் அவ்வாறே. இரண்டு தொழிலிலும் ஈடுபடுபவர்கள் ஒரு மிருக வைத்தியரின் ஆலோசனையை அவசியம் பெறவேண்டும். மாதமிரு முறையாவது ஒவ்வொரு பண்ணையும் வைத்தியரால் மேற்பார்வை செய்யப்படவேண்டும்.

### புலம்பெயர்ந்தவர்களுக்கான சேவைகள்

புலம்பெயர்ந்த மாணவர்கள் , ஆய்வாளர்களுக்கான அறிக்கைகள் ஆராய்ச்சி உதவிகள், இங்கிருந்து கொடுக்கப்படமுடியும். இதுபுலம் பெயர்ந்தவர்களால் அங்கிருந்து தான் தொடக்கப்பட வேண்டும். இங்குள்ளவர்கள் நம்பிக்கையான தொடர்புக் கருவிகளை வைத்திருப்பதுடன் குறிப்பிட்ட பாடங்களில் நிபுணத்துவமும் (Expertise) பெற்றிருக்கவேண்டும்.

### நாடு தழுவிய சந்தைக்கு உரிய தொழில்கள்

### 1. எரிகாரமும் (Caustic soda/ Sodium hydroxide) குளோரினும்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் இரண்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. இத் தொழிற்சாலை மூடிப் பல வருடங்களாகின்றன. மிக விரைவில் மீள அமைக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. அது நடந்தாலும் மேலும் ஆலைகள் அமைய தேவைகள் உண்டு. கடதாசித் தொழிற் சாலை, சவர்க்காரத் தொழிற்சாலைகளுக்கு எரிகாரமும் நீர் சுத்தி கரிப்புக்கு குளோரினும் பயன்படும்.

நல்ல ஆய்வுச் சாலையோடுகூடிய தொழிற்சாலையில் வெளிறல் பொடி(Bleaching powder) தொடங்கி சோடியம் குளோரின் சம்பந்தப்பட்ட பல இரசாயனப் பொருட்கள் உற்பத்தி பண்ணலாம். இலங்கையிலும் இந்தியாவிலும் இவற்றிற்கு சந்தைவாய்ப்புண்டு. தொழில்நுட்பம் பெறப்படும்போது சோடியம், உலோகம்(Metalic Sodium) தயாரிப்பது கூடச் சாத்தியமே. இவற்றிற்கு சர்வதேச வாய்ப்புண்டு.

### காற்றிலிருந்து பிராணவாயு (கைத்தொழில் / மருத்துவம்) Oxygen from Air (Industrial / Medical)

பிரதேசத் தேவைக்கும் பிற பிரதேசங்களுக்கு வழங்கும் வகையிலும் ஒரு ஆலை இலாபகரமாக அமைக்கலாம். பிராண வாயுவை அடைக்கும் கொள்கலன்களை (Cylinders) பராமரிப்பதும் நிர்வகிப்பதும் இத்தொழிலின் முக்கிய அம்சங்கள். இத்தொழிலில் இரண்டாம் கட்டமாக ஆர்கன் வாயுவையும் பிரித்து கொள்கலன்களிற் சேமிக்கலாம்.

### 3. நவீன பொறியியற் கைத்தொழிற் சாலை (Modern Engineering Workshop)

மின்னோட்டத் தூண்டலை உலை (Induction Furnace) கணனிகளாற் கட்டுப்படுத்தப்பட்ட எந்திரங்கள் (CNC Machine) மற்றும் நவீன வசதிகளடங்கிய ஒரு தொழிற்சாலைக்கு வேலைவாய்ப்புக்கள் இப்பிரதேசத்தில் இல்லாவிட்டாலும் இத்தொழில் சாலை அமையும் காரணத்தினால் பல வேலைவாய்ப்புகள் உருவாக வாய்ப்புண்டு. மேலும் நாட்டின் பிற பிரதேசங்களுக்கும் இந்தியாவிற்கும் கூட நாங்கள் பொருட்களை வழங்கமுடியும். இத்தகைய தொழிற்சாலை பிரதேசத்தின் தொழில்நுட்ப மட்டத்தை பெரிதும் உயர்த்தும்.

### 1000 வாட் காற்றாடி

சிறிய 1000(Watt) வலுவுள்ள காற்றாடி மூலம் வீடுகளுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம். இத்தகைய காற்றாடிகள் உள்ளூரில் உற்பத்தி செய்தால் அவை குறைந்த விலையில் பெறப்படும், பலரால் பாவிக்கப்படும்.

### சூரிய அடைப்புப் பலகை இணைக்கும் தொழில் (Solar Panel Assembly)

சூரிய ஒளியில் இருந்து சிலிக்கன் துகள்கள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் முறையில் அடைப்புப் பலகைகளை இணைக்கும் தொழில் பிரதானமானது. உள்ளூரில்



உற்பத்தி செய்யப்பட்டால் அவை குறைந்த விலையில் பெறப்படுவதுடன் பலர் இதனைப் பாவிக்கக் கூடியதாகவும் இருக்கும். இத் தொழிலே காலப்போக்கில் சிலிக்கன் துகள்களை உற்பத்தி பண்ணும் தொழிலுக்கும் வழிவகுக்கலாம். மணல் சிலிக்கோடை ஒட்சைட் என்பதும் பொருத்தமான மணல் வடக்குக் கிழக்கில் இருந்தால் அதுவும் சாத்தியமாகாலாம்.

### சுத்திகரிக்கப்பட்ட நல்லெண்ணெய்

புதிது புதிதாக நல்லெண்ணெயின் சிறப்புகள் அறியப்பட்டு வரும்வேளையில் பாவனையாளர்களும் உலகளாவி இருக்கிறார்கள். தரமான எண்ணெய் புலம்பெயர்ந்த தமிழர்களாலும் ஜப்பானியர்களாலும் விரும்பிப் பாவிக்கப்படுகிறது.

ஜப்பானுடன் வியாபாரம் செய்வது தனித்துவமானது. அவர்களுடைய தரக் கட்டுப்பாடுகளை அறிந்து அதை விஞ்சி நிற்கவேண்டும்.பின்னர்அதற்குரிய விலையை நிர்ணயிக்க வேண்டும். வெற்றிகரமாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தால் அதுவே பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய சான்றிதழாக அமையும். தொழில்நுட்பம் இலகுவில் பெற்றுக் கொள்ளலாம். சந்தைப்படுத்துதலே பிரதான அம்சமாகும்.

### கஜூ விதை மேலோட்டு எண்ணெய் (Cashew shell oil)

கஜூ விதையின் மேலோட்டில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் விசேட பாவனைக்குரியது. இந்தியாவிலும் இதற்கான தேவையுண்டு. மன்னார், மட்டக்களப்பு பிரதேசங்களில் இதற்கான மூலப்பொருள் கிடைக்கும்.

மேலே விபரிக்கப்பட்டவை உதாரணங்களே. தொழில்துணிபவர்கள் நன்கு ஆராயும் போது பலவிதமான வாய்ப்புகள் தெரிய வரும்.துறைசார்ந்த அறிஞர்களோடு ஆலோசித்து சரியான திட்ட அறிக்கை தயார் பண்ணி தொடங்கினால் தொழில்கள் வெற்றி பெறுவது சுலபமாக நடக்கும்.

முன்னர் குறிப்பிட்டதுபோல் அரசாங்கம் கட்டமைப்புக்களைச் சீரமைப்பதுடன் தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருக்கக் கூடிய தலையீடுகளையும் தவிர்த்தால் வடக்கு -கிழக்கு அபி விருத்தி அடைவதுடன் நாட்டின் வளர்ச்சிக்கும்பங்களிக்கும். (முற்றும்)

ம.ஜெனநாயகம்
பொறியியல் ஆலோசகர்

## மறுவாக்கு பதிவு நடைபெறும் பகுதிகளில் உ.தே.ஆணையாளர்களை நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

மறுவாக்குப் பதிவு நடைபெறும் நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை தொகுதிகளில் வாக்குச் சாவடிகளுக்கு பொறுப்பாக உதவித் தேர்தல் ஆணையாளர்களை நியமிக்க தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

வாக்குச் சாவடிகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட 400 அதிகாரிகள் நாளை மறுதினம் கொழும்பில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

அதேவேளை திருகோணமலை கும்புறுப்பிட்டிய வாக்குச் சாவடியில் மறுவாக்குப் பதிவு நடைபெறும். எதிர்வரும் 20 ஆம்திகதி, வாக்கு எண்ணும் பணிகள் அந்த வாக்குச் சாவடியிலே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கும்புறுப்பிட்டி வாக்குச் சாவடியில் 977 பேர் வாக்களிக்க உள்ளனர்.

வாக்களிப்புக்கள் 20 ஆம் திகதி காலை 7 மணிமுதல் 4 மணிவரை நடைபெறும். இதன்பின்னர் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்குகள் எண்ணப்படும்.

அதேவேளை நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் 37 வாக்குச் சாவடிகளில் வாக்கெடுப்பு நடைபெற்று, வாக்கு எண்ணும் பணிகள் கண்டி மாவட்டச் செயலகத்தில் இடம் பெறும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை மீள் தேர்தலின் போது இடது கை நடுவிரலில் மைபூசப்படும் என அறி விக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலின் போது வலதுகை சுண்டு விரல் மற்றும் மோதிர விரல் ஆகியவற்றில் மை பூசப்பட்டுள்ள நிலையில் தேர்தல் ஆணையாளர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். (6)

## போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி 50 மில். நிதியுதவி

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்கவென இலங்கை அரசு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

புனரமைப்புத் திட்டம் என்ற பெயரில் இலங் கை அரசு விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக 2 மில்லியன் அமெரிக்க டொலரை ஜப்பான் அரசு வழங்கியிருந்த நிலையில் தற்போழுது ஆசிய அபிவிருத்தி வங்கியும் நிதியளிக்கின்றது.

தமிழ் மக்களை மீளக் குடியேற்றவும் தமிழ் மக்களின் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும் என்ற பெயரில் அரசு பன்னாட்டு சமூகத்திடம் இருந்து தொடர்ந்து நிதி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(6-4)

## ஆளும் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு சீனா வாழ்த்து

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அண்மைய பொதுத் தேர்தலில் ஈட்டிய வெற்றிக்கு சீன அரசாங்கம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் ஆளும் கட்சி ஈட்டிய வெற்றி மகிழ்ச்சி அளிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்துடன் கடந்த காலங்களில் பேணப்பட்ட உறவுகள் தொடர்ச்சியாக பேணப்படும் எனவும் தேசிய ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், அபிவிருத்திப் பணிகளுக்கும் தொடர்ச்சியாக சீனா ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# களம் பல கண்ட யாழ் கோட்டை 6

## பிலிப் தே ஒலிவேறா

**1657 ஆண்டு மார்கழி 17 ஆம் திகதி**

கோட்டையின் கமாண்டராக வீடொர் தேப செண்டாவும் வைஸ் கமாண்டராக கஸ்பார் பிகாறோவும் விளங்கினர். இராசவாசல் முதலியாராக நல்லூர் புவிநாயகமுதலியார் இருந்தார். அவரோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த முதலியார்களும் கச்சாய் வன்னிமையும் ஒருநாள் கோட்டைக் கமாண்டர் வழங்கிய விருந்தொன்றில் கலந்துகொண்டனர்.

டச்சுக்காரர், ஒல்லாந்தர் இலங்கையின் ஆதிக்கம் பெற முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்ற சங்கதிகளைக் கமாண்டர் அனைவருக்கும் எடுத்து விபரித்தான். அவர்களை இந்த மண்ணில் காலூன்ற விடக்கூடாது ; அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை அவன் கோரினான். அதற்குப் பிரதி உபகாரமாக எதையும் தருவேன் என்றான். அந்த விருந்தில் தான் கச்சாய் வன்னிமை தனக்கு மனைவியாக ஒரு போர்த்துக்கேயப் பெண் தேவையெனக் கேட்டு வைத்தான். போர்த்துக்கேயக் கமாண்டர் கச்சாய் வன்னிமையை அவமானப்படுத்துவதற்காக தமது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக பறங்கிப் பெட்டைநாய் ஒன்றினை அனுப்பி வைத்தான்.


கச்சாய் வன்னிமை போர்த்துக்கேயரை யாழ்ப்பாண வன்னி மண்ணிலிருந்து துரத்துவதாக சபதமெடுத்து மன்னர் கோட்டையைக் கைப்பற்ற வந்திருந்த ஒல்லாந்த தளபதியை காண விரைந்து சென்றான்.


**1658 பெப்ரவரி 22ஆம்திகதி**

ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் கொழும்பு அடங்கியதன் பின்னரும் இரு ஆண்டுகள் வரை வடபிரதேசம் போர்த்துக்கேயரின் ஆட்சியின்கீழ்விளங்கியது. போர்த்துக்கேயரின் வட ஆள்புல அதிகாரத்துக்கு ஆதாரமாக விளங்கிய பலமான மூன்று கோட்டைகள் இன்னமும் ஒல்லாந்தரால் கைப்பற்றப் படாதிருந்தன. மன்னார்க் கோட் டைகள் துணைவலியோடு போர்த்துக்கே யர், மன்னார் முத்துனசலாபத்தில் இன்ன மும் முத்துக்குளித்தனர்.

ஊர்காவற்றுறைக் கோட்டையின் நீர்வழித் தடுப்புமுகாமின் பலம் கொண்டு, வலிமையான யாழ்ப்பாணக் கோட்டைக்கு மேலதிக பலம் சேர்த்து, யானை வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். எனவே, போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தி னுள் இருக் கும் வட ஆள்புலம் கைப்பற்றப்பட வேண்டியது என ஒல்லாந்த தேசாதிபதி விரும்பினான். அதனை நிறைவேற்றுவதற்குரிய தளபதியாக அட்மிரல் றைக்ளொவ் வன்ஹூ ன்ஸ் என்பவன் தெரி வானான். வன்ஹூன்ஜ் க்கு வயது 39.

1500 வீரர்களைக்கொண்ட படையுடனும் பத்தொன்பது யுத்த மரக்கலங்களுடனும் மன்னாரை நோக்கிப் புறப்பட்டான். அக்கால வேளையில் இந்து சமுத்திரத்தில் எதிரிப் போர்க்கலங்களுக்குப் பெரும் சிம்மசொப்பனமாக விளங்கிய நார்டென் என்ற யுத்தக் கப்பல் ஒல்லாந்தக் கப்பல்களுக்கு வழிகாட்டி வந்தது.





ஒல்லாந்த படைகள் மன்னார்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொண் டன. மன்னார்க் கோட் டையைக் கைப்பற்றிய தும், தனது படைவீரர் களை இரு பிரிவுகளாகப் பிரித்து, ஒன்றைக் கரை யோர நிலப் பாதை வழியே பூநகரிக்கூடாக யாழ்ப் பாணத்திற்கு கச்சாய் வன்னிமை வழிகாட்ட வழிநடத்தி வந்தான்; அவனது கப்பல்கள் கடல் மார்க்கமாக ஊர்காவற்றுறை கோட்டையைக் கைப்பற்றுவதற்காக விரைந்தன.

ஒல்லாந்தப் படைக ளை நடத்தி வந்த றைக் ளோவ் வன்ஹூன்ஸ்சை யாழ்ப்பாணத்து மக்கள் வன்கோயன் எனக் குறிப்பிட்டனர். இன்னும் பெரிய ஒல்லாந்தேசு எனவும் அழைத்தனர்.

மார்ச் மாதம் 9 ஆம் திகதி ஒல்லாந்தப் படை யாழ்ப்பாணத்திலிருந்து யேசு சபைத் கல்லூரியையும் டொமினிக்கன் சபை ஆலயத்தையும் மடத்தையும் கைப்பற்றிக் கொண்டது.

கோட்டைக்கு வெளியில் சீசாரியின் (பறங்கித்தெரு) இருந்த போர்த்துக் கேயர் அனைவரும் ஒல்லாந்தப் படைக்கு அஞ்சி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

யாழ்ப்பாணக் கோட்டையை ஒல்லாந்தர் முற்றுகையிட்டனர். அவர்கள் கோட்டையைச் சுற்றித் தரைப்புறமாகப் பாசறை அமைத்துக் கொண்டனர்.

ஊர்காவற்றுறைக் கோட்டை யைக் கைப்பற்றியபின் யாழ்ப்பாணக் கடனீ ரேரிக்குள் பிரவேசித்த ஒல்லாந்தக் கப்பல்கள் கொமுசாறி (தளபதியின் கட்டளைக்காகக் காத்திருந்தன. மார்ச் 16 ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 21 ஆம் திகதி வரை ஒல்லாந்தரின் முற்றுகை தொடர்ந்தது.

போர்த்துக்கேயரின் பலம்வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டையின் நாலாபக்கங்களிலும் ஒல்லாந்தப் படை சூழ்ந்து கொண்டது.

அவ்வேளை யாழ்ப்பாண நகரம் ஒரு சிறிய பட்டினமாகவிருந்தது. சத்திரம், பொதுக் கிணறு என்பன அமைந்திருந்தன. தாழ்ந்த கூரைகளைக் கொண்ட கற்கட்டடங்கள் காணப்பட்டன. மக்களது வீடுகள் விறாந்தைகளையும், தலைவாசல்களையும் கொண்டிருந்தன, வீடுகளின் முன்பக்கங்கள், வீதிப் பக்கமாகவிருக்காது உட்பக்கமாகவிருந்தன. மண்சுவர்களையும் ஓலைக்கூரைகளையும் கொண்ட வீடுகள் அதிகமாகக் காணப்பட்டன.


ஒல்லாந்தர் முற்றுகையிட்டுள்ளனர். பெரும் யுத்தம் நடக்கப் போகிறது எனக் கேள்விப்பட்டதும் வீடுகளுக்குள் ஒடுங்கிக் கொண்ட மக்கள் மூன்று நாட்களின் பின்னர் வழமைக்குத் திரும்பிக் கடைத்தெருவுக்கு வரத்தொடங்கினர். எவர் ஆண்டாலென்ற மனப் போக்கு அன்று யாழ்ப்பாண மக்களிடமிருந்தது போலும்.

செங்கை ஆழியான்

முற்றவெளியில் முற்றுகையிட்டிருந்த ஒல்லாந்தப் படைவீரர் இடையிடையே கடைத்தெருவுக்கும் வந்தனர். பாசறையிலிருந்த வீரர்கள் பொருட்களை அள்ளிக் கொள்வதும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தன. (தொடரும்)

# இம்முறை அமைச்சரவைக்கு 35ற்கும் 38ற்கும் இடைப்பட்ட வினைத்திறன் மிக்கவர்கள் தெரிவு

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இம்முறை நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள மிகவும் பொருத்தமான மற்றும் வினைத் திறன் மிக்கவர்களை அமைச்சரவைக்கு தெரிவு செய்யவுள்ளதாகவும் அமைசச்ரவை 35க்கு குறையாமலும் 38க்கு மேற்படாமலும் இருக்கும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட நிலை மாத்திரமல்லாது, நாடாளுமன்ற கலாசாரம் குறித்த அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது தனது நடைமுறை எனவும் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதும் தனது அரசியல் நோக்கம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அவர் யேமலும் தெரிவிக்கையில்,

18 இலட்சம் மேலதிக வாக்குகளால் என்னை வெற்றிபெறச் செய்த மக்கள் , இம்முறை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை நெருங்கும் அளவில் அதிகாரத்தை வழங்கி யுள்ளனர்.

விகிதாசார தேர்தல் முறையில் இதுவரை எந்தக் கட்சியும் இவ்வாறான அதிகாரத்தை இதுவரை பெற்றதில்லை. இந்த வெற்றியை வழங்கியதற்காக மக்களுக்கு நன்றி கூறுகிறேன்.

அமைச்சரவைக்கு நியமிக்கப்படுபவர்கள் அரசியல் அனுபவமுள்ளவர்களாகவும், தேசியப் பிரச்சினை குறித்து புரிந்தவர்களாகவும் செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவும் இருப்பார்கள்.

அத்துடன் சிரேஷ்ட அனுபவமுள்ளவர்களையும் மறக்கமுடியாது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (6)

# ஆளும் கட்சியின் விருப்பு வாக்கு சர்ச்சைகள் இன்னமும் முடிவடையவில்லை

(கொழும்பு)

ஆளும் கட்சியின் விருப்பு வாக்கு சர்ச்சைகள் இன்னமும் முடிவடையவில்லை என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட பல பிரதேசங்களில் விருப்பு வாக்கு தொடர்பில் ஆளும் கட்சியின் முன்னணி வேட்பாளர்களுக்கு இடையில் சர்ச்சை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த முன்னாள் பிரதி அமைச்சர் சந்தன கத்தரியாராச்சி , விருப்பு வாக்கு மோசடி குறித்து ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யத் தீர்மானித் துள்ளார்.

விருப்பு வாக்கு மோசடிகள் தொடர்பில் தாம் ஜனாதிபதிக்கு விரைவில் முறைப்பாடு செய்ய உள்ளதாகவும் விருப்பு வாக்குகளை மீள எண்ணும்போது தமக்கு ஆரம்பத்தில் காணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை கணிசமானளவு குறைவடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விருப்பு வாக்கு கணிப்பின் அடிப்படையில் தாம் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர்,தமது பிரதிநிதிகள் வாக்கு எண்ணும் நிலையங்களில் இருந்து வெளியேறியதாக சுட்டிக்காட்டிய அவர் அதன் பின்னர் பல தடவைகள் வாக்குகள் மீள எண்ணப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் காமினி லொக்குகேவிற்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் சந்தன கத்தரியாரச்சி பின்தள்ளப்பட்டதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

விருப்பு வாக்குகள் மீள எண்ணும் சந்தர்ப்பத்தில் தினேஷ் குணவர்த்தன மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையிலும் மாற்றம் காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# ஐ.தே.க.தேசிய அமைப்பாளர் பதவியை திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு வழங்க தீர்மானம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் பதவியை கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு வழங்குவதற்கு கட்சி தீர்மானித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியை மறுசீரமைப்பது தொடர்பிலும் தேசிய அமைப்பாளர் மற்றும் பொதுச்செயலாளர் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்- சிங்கள புதுவருடத்தை கொண்டாடுவதற்காக தென்னிலங்கைக்கு சென்றிருக்கின்ற ரணில் விக்ரமசிங்க கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டிருப்பதாகவும் அதனடிப்படையில் கட்சியின் செயலாளர், தேசிய அமைப்பாளர் பதவிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க வகித்த ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் பதவி திஸ்ஸ அத்தநாயக்கவிற்கும் தேர்லில் தோல்வியை தழுவிய சாகல ரத்நாயக்கவிற்கு பொதுச்செயலாளர் பதவியையும் வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தலில் தோல்வியைத் தழுவிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவிற்கு தேசிய பட்டியலில் இடத்தை ஒதுக்கிக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவரை கட்சியின் செயலாளராக நியமிப்ப தன் மூலமாக கட்சியை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே கட்சிக்குள் ஆரம்பக்கட்டமாக இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (6)

## அறநெறிக் கருத்தரங்கம்

(வேலணை)

மக்களின் வாழ்வினை வளப்படுத்த "இந்து சமயம் காட்டும் வழிமுறைகள்" என்னும் கருப்பொருளில் அறநெறி கருத்தரங்கம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 இற்கு கரவெட்டி பிரதேச செயலாளர் சத்தியசீலன் தலைமையில் கரவெட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "ஆலயங்கள் ஆற்ற வேண்டிய சமுதாயக்கடமைகள்" என்னும் கருத்துப் பட்டறையை செஞ் சொற்செல்வர் ஆறுதிருமுருகனும் சமூக மும் வாழ்வும் என் னும் கருத்துபட்டறையை வல்வை சிவகுரு வித்தியால யத்தின் அதிபர் ஆ.சிவநாதனும் வழங்கவுள்ளனர். ஆர்வமுடைய அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (6-22)


யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**க.பொ.த. உயர்தர அனுமதி- 2010**

மேற்படி கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பாடசாலையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

*விண்ணப்ப முடிவுத் திகதி :-28.04. 2010*

அதிபர்
வி.மாணிக்கம்

(C-112)


# புகலிடம் வழங்குவது குறித்த ஆஸி.யின் நிலைப்பாட்டுக்கு டென்மார்க் அதிருப்தி

(கொழும்பு)

தமிழ் அகதிகளுக்கு புகலிடம் வழங்குவது குறித்து அவுஸ்திரேலியாவின் நிலைப் பாட் டுக்கு டென்மார்க் அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதனை தற்காலிமாக இடைநிறுத்துவது தொடர்பில் அவுஸ்திரேலியா முன்வைத்த காரணிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என டென்மார்க் அறிவித்துள்ளது.

குறிப்பாக ஏனைய சில நாடுகளும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்குவதனை நிறுத்திக் கொண்டுள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீவன் ஸ்மித் மற்றும் குடிவரவு அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்து ஏற்புடையதல்ல என அது சுட்டிக்காட்டியுள்ளது.

எந்தெந்த நாடுகள் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதனை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளதென்பதனை அவுஸ்திரேலியா சுட்டிக்காட்ட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெயர்பெக்ஸ் ஊடகத்தில் டென்மார்க் இலங்கைத் தமிழர்களுக்கான புகலிடக் கோரிக்கையை தற்காலிமாக இரத்து செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் இது உண்மைக்குப் புறம்பானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த ஏப்ரல் மாதம் ஆறு தமிழ் குடும்பங்களுக்கு புகலிடம் வழங்க டென்மார்க் மறுத்துள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிகார அமைச்சர் ஸ்டீவன் ஸ்மித் அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் இலங்கையின் நிலவரம் குறித்து ஆராய்ந்ததன் பின்னர் குறித்த தடையுத்தரவை கடந்த டிசம்பர் மாதம் டென்மார்க் அதிகாரிகள் நீக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(6)

# கட்டுநாயக்கவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான வானூர்தி சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளின் வானூர்திகள் இரண்டு நாட்களுக்கு தற்காலிகமாக சேவைகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதை அடுத்து, ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கையின் பல வானூர்திகளும் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

ஐஸ்லாந்தின் எரிமலை வெடிக்க ஆரம்பித்துள்ள நிலையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிக புகை வெளியாகும் நிலையிலே வான் பரப்பின் தெளிவின்மை, குறைமட்ட காற்றமுத்தம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்காரணமாக கட்டுநாயக்கவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான வானூர்தி சேவைகள் பல இடை நிறுத்தப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (6)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எங்கள் குடும்பத்தலைவர்

அமரர்

## தம்பிமுத்து விநாசித்தம்பி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று சனிக்கிழமை (17.04.2010) அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1ம் கட்டை வீதி,
சாவகச்சேரி வடக்கு.

குடும்பத்தினர்

(1194)

# தனித்துவத்தை தாரை வார்க்காது தமிழரசுக்கட்சி செயற்பட வேண்டும்



இலங்கை நாட்டின் 7 ஆவது நாடாளுமன்ற அவைக்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பொதுத் தேர்தல் கடந்த 08.04.2010 அன்று நடைபெற்று முடிவுகளும் வெளியாகியுள்ளன.

சனநாயக ரீதியாக நடைபெற்ற இத்தேர்தலில் பல்வேறுபட்ட மாற்றுக் கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்ட பல கட்சிகளும் பல சுயேட்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் நின்றிருந்தன.

வழமையாக நடைபெற்ற முன்னைய தேர்தல்களில் மக்கள் அபிப்பிராயம், ஊகம் ஆகியவற்றிற்கமைய தேர்தல் முடிவுகள் அமைவதற்கு மாறாக தற்பொழுது நடந்து முடிந்த இலங்கையின் வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல் முடிவு அமைந்திருப்பதை யாபேரும் மறுப்பதற்கில்லை.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் போது ஒருபுறம் தமிழ்த் தேசியம் என்ற கொள்கைக்கும் மறுபுறம் அபிவிருத்தி என்ற கொள்கைக்கும் மக்கள் ஆணையைப் பெறும்வகையில் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் பல கட்சிகளது கொள்கைகள் முன்வைக்கப்பட்ட பொழுதிலும் சில கட்சிகள் இவ்விரு கொள்கைகளுக்

## தேசியமும் அபிவிருத்தியும் சமாந்தரமான இரு நதிகள்

கும் இடைப்பட்ட நிலையிலான நெகிழும் தன்மை போக்குடைய கொள்கையை முன்வைத்துப் போட்டியிட்டதை யாவரும் அறிவர்.

கடந்த காலீங்களில் வடக்கு -கிழக்கு



மாகாணங்களே ஒட்டுமொத்தமாக ஒரே கொள்கைக்காக தமிழ் மக்கள் ஆணையை வழங்கியது போல தற்பொழுது நடந்து முடிந்த தேர்தல் முடிவும் அமையாது மாறுபாடாகவே வாக்களிப்பில் பங்கு கொண்ட 18 விதமான மக்களில் பெரும்பான்மையினரது விருப்பு வெளிவந்துள்ளமையை உணர முடிகிறது.

நாட்டை ஆளும் அரசியல் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தியும் அதேவேளை தமிழ்த்தேசியம் என்ற கடும்போக்கை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியும் இவ்விரு கொள்கைக்கும் இடைப்பட்டதும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு உடனடித் தேவையாகவும் நடைமுறைச் சாத்தியமான நெகிழ்ச்சிப் போக்குக் கொள்கையான அபிவிருத்தியும் தேசியமும் கலந்த கொள்கையை முன்வைத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியுமர்கிய பிரதான அமைப்புகள் தேர்தல் களத்தில் போட்டி போட்டிருந்தன.

எனினும் நடந்து முடிந்த தேர்தல் முடிவானது காலத்தின் தேவைக்கேற்ப அபிவிருத்தியும் தேசியமும் கலந்த நெகிழ்ச்சிப் போக்குக் கொள்கையும் அபிவிருத்தியும் தேவையென்



பதை வெளிக்காட்டுவதாக அமைகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூட கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட இயற்கை, செயற்கை அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழும் தமிழ் மக்களின் சூழ்நிலையை, யதார்த்த நிலையை கருத்தில் கொண்டு தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கைக்கு முன்னுரிமை வழங்கி அதனை அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் அதற்கான பூரண ஒத்துழைப்பை நல்கவும் தாம் சித்தமாக இருக்கும் பாணியில் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் பத்திரிகையில் கருத்துக்கள் வெளிவந்ததையும் அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமசந்திரன் போன்றோர் அடிக்கடி பத்தரிகை அறிக்கைகள் மூலம் தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கை உட்பட மீள் குடியேற்றம், கடற்றொழில் வசதி போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்தியில் அக்கறை எடுப்பது பற்றி வலியுறுத்தியும் வந்துள்ளதுடன் குறிப்பாக தமிழரசுக் கட்சியில் தற்போது நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற முன்னணி பிரதிநிதிகளும் பத்திரிகை அறிக்கைகள் மூலம் அபிவிருத்தியும் தேசியமும் கலந்த நெகிழ்ச்சிப் போக்குடைய கொள்கையினை வெளிப்படுத்தியும் இருந்ததை யாவரும் அறிவர்.

இந்நிலையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் பெறுபேறு காலத்தின் தேவை, யதார்த்த நிலை என்பவற்றைக் கருத்தில் கொண்டே பொதுமக்கள் வாக்களித்துள்ளனர் என்பதைக் காட்டி நிற்கின்றது. கடந்த பொதுத் தேர்தலில் வாக்களிப்பில் கலந்து கொண்ட 18% மான மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் அபிவிருத்தி மட்டும் தான் தேவையெனக் கருதியிருப்பின் ஆளும் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் முழு ஆசனங்களையும் தனதாக்கியிருக்க வேண்டும்.

ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான உறுப்பினர் தொகையில் கணிசமான உறுப்பாண்மையை மட்டும் அபிவிருத்தியை முதன்மைக் கொள்கையாகக் கொண்ட தென் இலங்கைக் கட்சிகள் வென்றெடுத்துள்ளன.

அதேவேளை தமிழ்த் தேசியம் என்ற கடும்போக்குக் கொள்கையை வலியுறுத்தி நின்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு ஸ்தானம் கூட கிடைக்கவில்லை. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களது இன்றைய உடனடித் தேவை, யதார்த்த நிலை ஆகியவற்றையும் நீண்ட கால தூரநோக்கைக் கொண்ட தேசிய கொள்கையையும் தன்னகத்தே கொண்டு களத்தில் நின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான உறுப்பாண்மையை வென்றெடுத்ததன் மூலம் தமிழ் மக்களது உடனடித் தேவையான இயல்பு வாழ்க்கை உட்பட மீள் குடியேற்றம், கடற்றொழில் அடங்கலான ஏனைய அபிவிருத்திகளைப் பெற்றுத் தருவதற்கு நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஆணையினை வழங்கியுள்ளதாகவே குறித்த வெற்றியை பொருள் கொள்ள வேண்டும்.

தேசியத்திற்கான கொள்கைப் போராட்டம் என்பது ஒரு தனியான நீரோட்டம். அதேபோல தமிழர்களின் இயல்பு வாழ்க்கை, அபிவிருத்தி என்பது வேறு தனித்துவமான ஒரு நீரோட்டம். இவ்விரு நதிகளும் ஒன்றையொன்று மேவாது சமாந்தரமாக, தனித்துவமாக ஓடிக் கொண்டிருப்பதே சிறந்ததாகும். எப்போதாவது ஒரு நாள் இவ்விரு நதிகளும் ஒரு இடத்தில் சங்கமமாகி சமுத்திரமாக தனது தனித்துவத்தை உள்ளடக்கிய விழுமியங்களுடன் பரிணாம வளர்ச்சியடைந்த சமூகமாக உருவெடுக்கவும் கூடும். அதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மக்கள் நன்மை கருதி காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப கடந்த காலங்களில் தேசியத்திற்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளும் தென்ஆபிரிக்காவின் கறுப்பினத்தின் தலைவர் நெல்சன் மண்டேலாவும் எவ்வாறு அவ்வவ்பொழுது மக்கள் தேவையைக் கருத்தில் கொண்டு விட்டுக் கொடுப்புடன் கூடிய புரிந்துணர்வு நல்லிணக்கக் கொள்கைப் பிரகடனங்கள் செய்து அதன்படி செயற்பட்டார்களோ அதேவழியில் மக்கள் ஆணையைப் பெற்ற தமிழரசுக் கட்சி செயற்படுவதில் தவறேதும் இருக்க முடியாது.

எனவே அரசினால் அபிவிருத்தி தொடர்பில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தமிழருக்கும் வடக்கு- கிழக்கு மண்ணுக்கு பாதிப்பில்லாத வகையில் அதையும் உள்வாங்கி அமையுமாயின் அதற்குப் பூரண ஆதரவை நல்குவதே காலத்தின் தேவையாகும்.

இதற்காக தமிழரசுக் கட்சி தனது தனித்துவத்தை இழக்காது அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கான நற்பணிகளை செய்வதன் மூலம் வடக்கிலும் கிழக்கிலும் அபிவிருத்தி மூலம் தமிழருக்கு இயல்பு வாழ்க்கையைப்



பெற்றுக் கொடுப்பதுடன் வட கிழக்குப் பிரதேசத்தில் தனித்துவம், தேசியம், தமிழ் மண் சிறிது சிறிதாக உட்கிடையாக பறிபோவதை- சிதைக்கப்படுவதை தடுத்து நிறுத்த சிங்கள முற்போக்காளரின் புரிந்துணர்வு, நட்பு, நம்பிக்கையைப் பெறவும் சந்தேகங்களைப் போக்கவும் கூடியதாக அமையும்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஆட்சியில் நேரடியாகப் பங்கு கொண்டு அமைச்சர் பதவி பெற்று பல அபிவிருத்திகளை வடக்கிலும் கிழக்கிலும் ஆற்றியிருந்தனர். தேசியம் விட்டுக்கொடுக்கப்படவில்லை. இதனால் தனது தனித்துவம் இழக்கப்படவில்லை.

அதேபோல இலங்கைத் தமிழரசுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில்



அபிவிருத்திக்காக இணைந்து அமைச்சரவையில் உள்ளூராட்சி அமைச்சர் பதவியை பெற்று உள்ளூராட்சி அமைப்பு தொடர்பில் பல அபிவிருத்திகளை ஆற்றியிருந்தும் தனது தனித்துவத்தை இழக்கவில்லை. பேணிப் பாதுகாத்த வண்ணம் செயற்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூட ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி தமிழர்களின் இயல்பு வாழ்வுக்கும் அபிவிருத்திக்கும் முன்னுரிமை வழங்கியிருந்தனர்.

தமிழர் தேசியத்தை இறுக்கமாக வலியுறுத்தியமையே தமிழ் காங்கிரஸ் கட்சியின்

**அருளம்பலம் இராஜரட்ணம் LL.B**
சிரேஷ்ட சட்டத்தரணி,
சட்ட விரிவுரையாளர்.

தோல்விக்குக் காரணம் என பலராலும் பத்திரிகை மூலம் அறியவருகிறது. அக்கருத்து முழுமையாக ஏற்கக்கூடிய ஒன்றல்ல.

தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றின் தோல்விக்கு காரணங்கள் பல இருப்பினும் 18% மானவரது கருத்துப்படி தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகச் சேர்ந்து நின்று போட்டியிடவில்லை என்பதையே இது வெளிப்படுத்தியுள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

பதி இழந்தனம்; பாலனை இழந்தனம்
நிதி இழந்தனம்; இனி நமக்கு உளதென நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்
—அரிச்சந்திர புராணம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ!

நல்லூர்க் கந்தனின் ஆலயச் சூழலில் இருந்த நடைபாதை வியாபார அமைவிடங்கள் நேற்று யாழ்ப்பாண மாநகர சபையால் அகற்றப்பட்டுள்ளது.

நல்ல பணி எங்கு நடந்தாலும் அதனைப் பாராட்டுவது தார்மீகக் கடமை. அவ்வகையில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு சபாஷ்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் இன்னும் பல பணிகள் அதிகாரிகள் முன் காத்திருக்கின்றன. அந்தக் கடமையை செய்வதற்கு தயங்க வேண்டிய அவசியமே இல்லை.

துணிவும் நேர்மையும் கொண்ட அதிகாரிகளினால்–பணியாளர்களினால் எந்த விடயத்தையும் கனகச்சிதமாகச் செய்ய முடியும்.

அதே நேரம் அஞ்சி அஞ்சி வாழ்ந்து சம்பளத்தை மட்டுமே கருத்தாகக் கொண்ட எந்த அதிகாரிகளாலும், பணியாளர்களாலும் எதனையுமே சாதிக்க முடியாது.

மாறாக அவர்களால் பொது மக்களே சிரமங்களை அனுபவிக்கும்பரிதாபநிலைஏற்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது இரு வகை நிர்வாகம் நடைமுறையாவதை காணலாம்.

அதாவது யாழ். குடாநாட்டை சொந்த இடமாகக் கொண்ட மக்கள் மற்றும் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற மக்கள் என்ற இருவகையில் சட்ட அமுலாக்கல் இடம்பெறுகின்றன.

தென்பகுதி மக்கள் வாகனங்களை எங்கும் நிறுத்த முடியும். ஒருவழிப் பாதையை இருவழிப் பாதையாக மாற்ற முடியும். தெருவில்–முற்ற வெளியில்– வீதியில்–கடையோரங்களில் என எங்கும் தங்கலாம், தூங்கலாம், கூடியிருந்து மது அருந்தி கைதட்டி பாடலாம், ஆடலாம்.

ஆனால் யாழ். குடாநாட்டு மக்கள் அப்படி எதுவுமே செய்ய முடியாது. இரண்டு பேர் கூடி நின்று கதைத்தாலும் பயங்கரவாதத்தடைச் சட்டம் அதனை அனுமதிக்காதாம். எப்படி இருக்கிறது நியாயம்?

இந்த யதார்த்தம் முறியடிக்கப்பட வேண்டும். நாடென்றால்–சட்டம் என்றால் அது யாவர்க்கும் பொது. இதில் பெரும்பான்மை சிறுபான்மை என்ற பாகுபாட்டிற்கு இடமே இல்லை.

எனவே உரிய அதிகாரிகள் முதலில் சட்ட நடைமுறைகளை இனமத வேறுபாடின்றி அமுல்படுத்த வேண்டும்.

சட்டநடை முறைகளின் போது அவர் தம் பதவிக்கு ஆபத்து வருமென இம்மியும் எண்ணாமல் துணிவுடன் செயலாற்றுவது கட்டாயம்.

பதவிக்கு ஆபத்து வந்தாலும் 'மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ' என்று துணிவுடன் கேட்க வேண்டும்; தூக்கி எறிய வேண்டும். அப்போதுதான்,

இது இலங்கைத் திருநாடு. இங்கு எல்லோருக்கும் சம உரிமை உண்டெனும் உண்மை மனித உள்ளங்களில் குடியேறும்.

நீதி தழைக்கும்; நியாயம் ஓங்கும்; நிம்மதி கிடைக்கும். எங்கே பார்க்கலாம்.

# ஜெனரல் பொன்சேகா நாடாளுமன்றம் செல்வதைத் தடுக்க அரசு முயற்சி

## ஜனநாயக தேசிய முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்துக்கு செல்வதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதாக ஜனநாயக தேசிய முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள ஜனநாயக தேசிய முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க இக்குற்றச் சாட்டினை முன்வைத்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மக்கள் பிரதிநிதியாக நாடாளுமன்றம் செல்வதற்கு முன்னாள் இராணுவத் தளபதிக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. எனினும் அவரை நாடாளுமன்றம் செல்ல விடாமல் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்கிறது. இதுவரை அரசாங்கமோ அல்லது இராணுவமோ இந்த விடயம் தொடர்பில் தமது நிலைப்பாட்டினை அறிவிக்கவில்லை.

எனவே தான் ஜெனரல் சரத் பொன்சேகாவை நாடாளுமன்றுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரி இராணுவத் தளபதிக்கும் நாடாளுமன்றச் செயலாளருக்கும் நேற்று கடிதம் அனுப்பியுள்ளோம்.

இராணுவ நீதிமன்றில் மேற்கொள்ளப்படும் இரண்டாவது விசாரணைகளுக்குத் தலைமை வகிக்கும் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் அந்தப் பதவிக்குப் பொருத்தமற்றவர். மேஜர் ஜெனரல் பன்னிப்பிட்டிய மீதான விசாரணைகளின் போது போலி சாட்சியம் வழங்கிய இவரை அப்பதவியில் நியமிக்க முடியாது என்றார். ஏப்ரல் 22 ஆம் திகதி முதலாவது நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னதாக 19 ஆம் திகதி சரத் பொன்சேகா மீதான விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில் அவரை நாடாளுமன்றம் செல்ல அனுமதிக்காத வகையில் தீர்ப்புகள் எதுவும் வழங்கக் கூடிய சாத்தியம் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அநுரகுமார திசாநாயக்க, நிச்சயமாக. அவ்வாறானதொரு திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அதற்கு நாம் எப்போதும் இடம்கொடுக்கப் போவதில்லை என்று கூறினார். (6)

# குடாநாட்டில் வேலையில்லாப் பிரச்சினை வெகுவிரைவில் தீர்க்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

குடாநாட்டில் வேலையில்லாப்பிரச்சினை வெகுவிரைவில் தீர்க்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். கொழும்புத்துறை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பகுதியில் இளைஞர் யுவதிகளிடையே வேலையில்லாப் பிரச்சினை ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்து வருவதை தான் உணர்வதாகவும் இந்நிலை யாழ் குடாநாடு முழுவதும் காணப்படுவதாகவும் தெரிவித்ததுடன், கூடிய விரைவில் யாழ். குடாநாட்டில் 3 பாரிய ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு அதன் மூலம் சுமார் 5000 இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு தான் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அதே நேரம் உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கி அதனூடாகவும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டத்தையும் தான் விரைவில் செயற்படுத் தவுள்ளதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது விளையாட்டுப் போட்டிகளில் தெரிவான வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் அமைச்சர் பரிசில்களையும் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேற்படி சனசமூக நிலையக் கட்டிடப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென அமைச்சர் ஏற்கனவே 3 1/2 இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் கொறடாவாக ரவி கருணாநாயக்கவை நியமிக்க முயற்சி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் கொறடாவாக ரவி கருணாநாயக்கவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதுவருட விடுமுறையை கழிப்பதற்காக பேருவளை சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் மேற்கொண்ட தொலைபேசி கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இதேவேளை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சியின் கொறடாவாக கடமையாற்றிய ஜோசப் மைக்கல் பெரேரா அந்தப் பதவியை மீண்டும் வகிப்பதில்லை என தீர்மானித்துள்ளார்.

இதனையடுத்து அரசாங்கம் பலமான நிலையில் இருக்கும் சூழலில் எதிர்க்கட்சியை நாடாளுமன்றத்தில் வழிநடத்தக் கூடிய நாடாளுமன்ற சம்பிரதாயங்களை நன்கு அறிந்த ஒருவர் இருப்பது முக்கியமானது என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் வரிசையில் ரவி கருணாநாயக்க 8 ஆவது இடத்தில் இருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க, ஜோசப் மைக்கேல் பெரேரா, கரு ஜெயசூரிய, காமினி ஜயவிக்ரம பெரேரா, ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் செனவிரத்ன மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் வரிசையில் உள்ளனர்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் கொறடாவாக (பிரதான அமைப்பாளர்) நியமிக்கப்படவுள்ளமை குறித்து ரவி கருணாநாயக்கவிடம் கேட்டபோது அது குறித்து தான் அறியவில்லை என தெரிவித்தார்.

எனினும் கட்சியின் இணைப் பிரதித் தலைவர்களாக தானும் சஜீத் பிரேமதாசவும் நியமிக்கப்படுவது பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். (6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்




## நமது தாய் நாடு

மேலைநாட்டு உதவி எதையுமே நீங்கள் நம்பி இருக்கக் கூடாது. தனி மனிதர்களைப் போலவே நாடுகளும் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள வேண்டும். இது தான் உண்மையான தேசபக்தியாகும். ஒரு நாடு அவ்விதம் செய்ய முடியாமற் போனால் அதற்கு உரிய சரியான நேரம் இன்னும் வரவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நாடு, காலம் வரும் வரையிலும் சற்றுக் காத்திருக்கத்தான் வேண்டும்.

மரணம் வரும் வரையிலும் வேலை செய். நான் உன்னுடன் இருக்கிறேன். நான் இறந்த பிறகும் என் ஆவி உன்னுடன் இருந்து வேலை செய்யும். இந்த வாழ்க்கை வருவதும் போவதுமாக இருக்கிறது. செல்வம், புகழ், இன்பங்கள் இவை எல்லாமே ஏதோ ஒரு சில நாட்களுக்குத் தான் நிலைத்திருக்கப் போகின்றன. உலகப் பற்று நிறைந்த ஒரு குழுவைப்போல இறந்து போவதை விட , உண்மையை எடுத்து போதித்துக்கொண்டே கடமை என்னும் களத்திலே உயிரைவிடுவது மிகமிக மேலானது. முன்னேறிச் செல்!

# அரசியல் உள்நோக்கங்களை நிறைவேற்றவே அரசின் நகர்வுகள் காணப்படுகின்றன

## ஜே.வி.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டை சீர்செய்ய இலங்கையின் அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என அரசாங்கம் கூறுவதில் எவ்விதமான உண்மைத் தன்மையும் இல்லை.

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்ட புதிய அரசியல் அமைப்பை இதுவரையில் வெளியிடாமையில் அரசின் உள்நோக்கம் வெளிப்பட்டுள்ளதென ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

சகல தரப்பினரதும் ஒத்துழைப்புக்களை அரசாங்கம் கோருவது சுயநலனுக்காகவே தவிர நாட்டின் நலனுக்காக அல்ல. எனவே ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்குமான ஜே.வி.பி.யின் போராட்டம் மேலும் வலுவடைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய பாராளுமன்றத்தில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் கூறுகையிலேயே சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் தெளிவுபடுத்துகையில்,

நாட்டை வளமாக்க சகலரினதும் ஒத்துழைப்பை கோரும் அரசாங்கத்தின் உண்மைத் தன்மை குறித்து சந்தேகம் காணப்படுகின்றது.

பெயரளவில் சகல தரப்பினருக்கும் அழைப்பு விடுத்து விட்டு எதிர் கட்சிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் தனது அரசியல் உள்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவுமே அரசின் நகர்வுகள் காணப்படுகின்றன.

அரசியல் அமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் எனக் கூறும் அரசினால் தன்னால் தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பை ஏன் பகிரங்கப்படுத்த முடியவில்லை.

கடந்த தேர்தல் காலங்களில் அரசியலமைப்பு தொடர்பாகவும் விகிதாசார தேர்தல் முறை தொடர்பாகவும் பிரசாரம் செய்த அரசாங்கம் தேர்தல் வெற்றியின் பின்னர் மௌனத்தையே கடைப்பிடித்து வருகின்றது.

பொது மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை அரசாங்கம் கால தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும்.

நாட்டின் சட்ட ஒழுங்கை பாதுகாப்பதற்காகவே பாராளுமன்றத்திற்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

எவ்வாறாயினும் நாட்டில் நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கான எமது போராட்டங்கள் தொடரும் எனக் கூறினார். (6-4)

# சுசில் கிந்தெல்பிட்டியவுக்கு பிணை மறுப்பு; 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்ட ஊடகவியலாளர் சுசில் கிந்தெல்பிட்டிய எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சட்ட விரோதமாக துப்பாக்கியொன்றை வைத்திருந்தமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே கிந்தெல்பிட்டிய உள்ளிட்ட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தச் சந்தேக நபர்கள் மூவரும் பயணித்த வாகனத்திலிருந்து குறித்த துப்பாக்கியை கைப்பற்றியதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

ஆனால் குறித்த துப்பாக்கி சுசில் கிந்தெல்பிட்டிய பயணித்த வாகனத்தில் எவ்வாறு வந்ததென்பதில் சந்தேகம் நிலவுவதாக அவரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் கூறினர்.

அத்துடன் வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி தன்னியக்கத் துப்பாக்கியா என்பது பற்றிப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டுமெனினும் அவ்வாறு அறிவிக்கப்படவில்லையெனச் சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டினர்.

துப்பாக்கி தன்னியக்கமானதா என்பது பற்றிப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட நீதவான் லங்கா ஜயரட்ன பொலிஸார் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்பதற்காகச் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க முடியாதெனக் கூறினார்.

அரச இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் துப்பாக்கியை அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதவான் சந்தேக நபர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (6)

# அரசியலமைப்பு மாற்றம் குறித்த ஆரம்ப கட்ட செயற்பாடுகள் ஆரம்பம்

## ஹெலஉறுமய

(கொழும்பு)

அரசியலமைப்பு திருத்தம் குறித்து பேசிக் கொண்டிருக்காமல் அவற்றை நடை முறைப் படுத்தும் வகையிலான பெரும்பான்மை பலத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு நாட்டு மக்கள் வழங்கியுள்ளனர்.

எனவே அரசியலமைப்பு மாற்றம் குறித்த ஆரம்பகட்ட செயற்பாடுகளை ஏற்கனவே ஆரம்பித்து விட்டோம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசியலமைப்பு மாற்றம் குறித்த ஏற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

1989 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டு மக்கள் தேர்தலின் பாரிய ஆதரவினை வழங்கியுள்ளனர். அதாவது அரசியலமைப்பு மாற்றம் மற்றும் திருத்தம் குறித்து நடைமுறைச் சாத்தியத்துடன் பேசுமளவுக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுத்துள்ளனர்.

அதாவது கடந்த காலங்களில் அரசியலமைப்பு திருத்தம் குறித்த விடயங்கள் ஆவணங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தன. மாறாக அவற்றை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை காணப்பட்டது.

ஆனால் இம்முறை அவ்வாறான முயற்சி ஒன்றை யதார்த்தமானதாக மாற்றும் வகையிலான பெரும்பான்மை பலம் ஒன்றை மக்கள் எமக்கு வழங்கியுள்ளனர். அரசாங்கம் கோரிய பலமான பாராளுமன்றம் கிடைத்துள்ளது.

இந்நிலையில் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் கூறியதைப் போன்று தற்போது அமுலில் இருக்கும் அரசியலமைப்பில் பல மாற்றங்களை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதற்கான முயற்சிகளில் ஏற்கனவே நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டு வரும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிர்க் கட்சிகள் ஆதரவு வழங்கும் என்று எதிர் பார்க்கின்றோம். (6)

## மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில்

# முஸ்லீம் காங்கிரஸுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்வரும் பாராளுமன்றத்தில் 140 ஆசனங்கள் வரையில் பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்காக முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பை ஆளும் கட்சி நாடியுள்ளதாக இரகசிய தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எதிர்வரும் 22 ஆம் திகதி பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னர் இரு கட்சிகளுக்கும் இடையிலான இறுதி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் முனைப்புக்களில் ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கண்டி மாவட்ட முடிவுகளின் அடிப்படையில் இறுதிக் கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளுமாறு ஆளும் கட்சியின் ஒரு பிரிவினர் கோரிக்கை விடுத்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

# தனித்துவத்தை தாரை வார்க்காது...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இலங்கைத் தமிழரசுக்கட்சி மட்டுமே அனைத்து தமிழ் பேசும் மக்களையும் ஒருமித்து பிரதிநிதித்துவம் செய்யக் கூடிய வகையில் வட கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும் போட்டியிட்டதையும் அரசியல் முதிர்ச்சியும், மதிநுட்பமும் கொண்ட தமிழ் பேசும் மக்கள் மனதில் பதிவு செய்ததன் எதிரொலியே வரலாற்றின் திருப்பு முனையில் நிற்கும் தனித்துவ மக்கள் கூட்டத்தின் விவேகமான வாக்குப் பதிவு நிகழ்வாகும்.

ஆயினும், இலங்கை அரசியல் வரலாற்றில் 1965 ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழரசுக்கட்சி இணைந்து ஆட்சி புரிந்தும் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை அமுல்படுத்த முடியாது தோல்வி கண்டதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் பங்களிப்புடன் வரைந்த அரசியலமைப்பு நகல் திட்டம் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் இயைபானது என வெளிப்படையாக வரவேற்கப்பட்ட போதும் நாடாளுமன்றத்தில் கிழித்தெறியப்பட்டு புறந்தள்ளப்பட்டதும் சரித்திரம்.

இவ்விரு முயற்சிகளையும் முன்னெடுத்த டட்லி, சந்திரிகா ஆகியோருக்கு பாராளுமன்ற பலமோ மக்கள் ஆதரவுப் பின்புலமோ இல்லாமையே காரணம் என்பது யதார்த்தபூர்வமான உண்மையாகும். இந்த பின்புலத்தில் இன்றைய சூழ்நிலையைப் பரிசீலிப்பது இன்றியமையாததாகும்.

இலங்கையில் ஜனாதிபதியாகவும், தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்களின் சிறப்பாக சிங்கள மக்களின் நம்பிக்கைக்குரிய இரட்சகராக மஹிந்த ராஜபக்ஷ விசுவரூபம் எடுத்துள்ளார் என்பதில் எள்ளளவேனும் சந்தேகம் இல்லை.

அத்துடன் தென்னிலங்கையில் பேரினவாத நச்சுக் கொள்கைகளை வலியுறுத்திய கட்சிகளை பாராளுமன்ற தேர்தலில் பூண்டோடு ஒழித்து பலம் மிக்க பாராளுமன்றத்தை தன்வசம் ஆக்கியுள்ளார் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய பகிரங்க இரகசியமாகும்.

தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ் மக்கள் தெரிவு செய்யும் பிரதிநிதிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் உறுதியாக இருப்பதாகவும் யாழ். நகரில் வந்து, தமிழ் மக்களைத் தான் நம்புவதாகவும், தமிழ் மக்களும் தன்னை நம்ப வேண்டும் என்றும் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தெரிவு செய்து அனுப்பிய பிரதிநிதிகளுடன் பேசி உருவாகும் உணர்வுபூர்வமான அரசியலமைப்பு உறுப்புரைகளை நிறைவேற்றும் மன வைராக்கியம், துணிவு, ஆளுமை, சனாதிபதி ராஜபக்ஷவுக்கு உண்டா என்பதை ஆராயும் போது எதுவித சந்தேகமும் இன்றி கடந்த ஆண்டு எமது நாட்டில் நடந்த சம்பவம் விசுவரூபம் எடுத்து எம்முன் நிழலாடுகிறது.

எனவே இவ்வாறான அதிதீவிர துணிவும், மனவைராக்கியமும் நிறைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேசித் தீர்க்க முயலும் போது உருவாகும் எதிர்ப்புகளுக்கு அடிப்பணியாது எதிர்ப்பலைகளை துவாம்சம் செய்து தீர்வை அர்ப்பணிப்புடன் அமுல்படுத்தி இலங்கைத் தீவில் நியாயமான அதிகாரப் பகிர்வு, அனைத்துத் தேசிய் இனங்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வு, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த மகிந்த ராஜபக்ஷவால் முடியாதா என்ற கேள்வி எழுகின்றதல்லவா?

ஆகவே, தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்ப்பேன் என்ற மகிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கரு வளர்ச்சியடைந்து செயல் வடிவம் பெற களம் அமைக்க வேண்டியது பெரும்பான்மையாக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய தமிழரசுக் கட்சியின் காலத்தால் புறம் தள்ள முடியாத கடப்பாடாகிறது.

இவ்வாறு களம் அமைக்கப்படும் பட்சத்தில் பாரத நாட்டின் பின்புலத்துடன் கூடிய சர்வதேச சமூகத்தின்சம்பூரண சம்மதமும், ஒத்துழைப்பும் சங்கமிக்கும் நிலை உருவாகும்.

ஏது எவ்வாறாயினும் தனித்துவத்தை தாரை வார்க்காது வெளிப்படைத் தன்மையுடன் கூடிய நேர்மையான மதிநுட்பத்துடன் கறைபடியாத கரமாக தமிழரசுக் கட்சி ஆளுமையும், மனவுறுதியும், மக்கள் ஆதரவும் கொண்ட பேசித் தீர்ப்பேன் எனக் கூறிய மகிந்த ராஜபக்ஷவின் கரத்தை புரிந்துணர்வுடைய நல்லிணக்கத்துடன் பற்றி அர்ப்பணிப்புடன் செயற்படின் ஆசியாவின் ஆச்சரியமான் அபிவிருத்தியடைந்த நாடாக மிளிர தமிழ் மக்களும் பங்காளியானர்கள் என சரித்திரம் கூறும்!

ஒரு சமயம் வெளிப்படையான புரிந்துணர்வுடன் நல்லிணக்கம் உருவாகாவிடின் தமிழ் மக்களின் உள்ளார்ந்த ஆதிக்கத்தை நிஜமாக்க பாரத நாட்டின் பின்புலத்துடன் கூடிய சர்வதேச சமூகத்தின் செயற்பாடு யதார்த்தமாகும் காலம் உதயமாகும் என்பதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை!!

# டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் அரையிறுதி வாய்ப்பு பிரகாசம்

## பஞ்ஜாப் மூன்றாவது முறையாக சம்பியன் வாய்ப்பையிழந்தது

ரோகித், சுமனின் அதிரடித்துடுப்பாட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியை வீழ்த்தி அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் மூன்றாவது இருபது–20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடை பெற்று வருகிறது.

இதில் நேற்று தர்மசாலாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 51ஆவது போட்டியில் சங்கக்கார தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணித் தலைவர் அடம் கில் கிறிஸ்ட் முதலில்களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி மஹேல–சங்கக்கார ஜோடியின் அதிரடியில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 174 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 62 பந்துகளில் (13 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 93 ஓட்டங்களையும் அணித் தலைவர் குமார் சங்கக்கார 37 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 20 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்கஸர் உட்பட) 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரியான் கரிஸ், ஆர்.பி.சிங். ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். பதிலுக்கு 20 ஓவர்களில் 175 ஒட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி ரோகித் சர்மா–சுமனின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 19.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 178 ஓட்டங்களைக் குவித்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் றோகித் சர்மா ஆட்டமிழக்காமல் 38 பந்துகளில் (6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 68 ஓட்டங்களையும் சுமன் 31 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர் கள் உட்பட) 43 ஓட்டங்களையும் மிஷ்ரா 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மலிக், இர்பான் பதான், திரோன், பியூஸ் சாவ்லா மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த் தினர்.

இவ் வெற்றியின் மூலம் டெக்கான் சார் ஜர்ஸ் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 7ஆவது வெற்றியைப்பெற்று 14 புள்ளிகளுடன் 4ஆவது இடத்துக்கு முன்னேறி அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது.

இதேவேளை கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 9 ஆவது தோல்வியைச் சந்தித்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது. இதன் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியின் சம்பியன் கனவு மூன்றாவது முறையாக தகர்ந்தது.

## தரவரிசைப் பட்டியல்

| DLF INDIAN PREMIER LEAGUE அணிகள் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | ஓட்டவிகித சராசரி |
|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 9 | 3 | 0 | 18 | + 1.116 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 13 | 7 | 6 | 0 | 14 | + 0. 467 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 13 | 7 | 6 | 0 | 14 | + 0.066 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 13 | 7 | 6 | 0 | 14 | - 0.363 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 13 | 6 | 7 | 0 | 12 | + 0.270 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 6 | 7 | 0 | 12 | - 0.421 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 5 | 7 | 0 | 10 | - 0.632 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 13 | 4 | 9 | 0 | 8 | - 0.490 |

## நடிகை வீணாவுக்கு ஆசிப் மிரட்டல்; பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பரபரப்பு

(லாகூர்)

பாகிஸ்தான் வீரர் முகமெட் ஆசிப்–நடிகை வீணா மலிக் இடையிலான மோதல் உச்ச கட்டத்தை எட்டியுள்ளது. தனக்கு எஸ்.எம்.எஸ். மற்றும் இ–மெயில் மூலம் ஆசிப் மிரட்டல் விட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சர்ச்சைக்குரிய வீரர் முகமெட் ஆசிப் ஊக்க மருந்து உட்கொண்டது, போதை பொருள் வைத்திருந்தது என பல்வேறு பிரச்சினைகளில் சிக்கினார்.

சமீபத்தில் ஆசிப்–சானா ஹிலால் இடையே திருமணம் நடந்தது. இதனால் ஆசிப்பின் முன்னாள் காதலியும் பாகிஸ்தான் நடிகையுமான வீணா மலிக் ஆத்திரமடைந்தார்.

ஆசிப் தன்னிடம் கடனாக பெற்ற ஒரு கோடியே 40 இலட்ச ரூபாயை தராமல் மோசடி செய்வதாக குற்றச்சாட்டினார்.

அவர் கொடுத்த காசோலை செல்லுபடியற்று திரும் பியதாம். அதனால் லாகூர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இதற்கு பதிலடியாக தனது காசோலையை வீணா திருடியதாகவும் அவருக்கு க்டனாகக் கொடுக்க வேண்டிய 34 இலட்ச ரூபாயை ஏற்கனவே திருப்பிச் செலுத்திவிட்டதாகவும் ஆசிப் கூறினார்.

இப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காணும்படி பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மலிக்கை வீணா கேட்டுக்கொண்டார். ஆதாரங்களை ஆய்வு செய்து நீதி கிடைக்க ஏற்பாடு செய்வதாக ரஹ்மான் உறுதியளித்தார்.

**பொலிஸில் புகார்**

இந்தச் சூழலில் ஆசிப் மீது புதிய புகாரை வீணா கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,



கடனாகக் கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்பதை நிறுத்திக்கொள்ளாவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என இ–மெயில் மற்றும் எஸ்.எம்.எஸ். மூலம் ஆசிப் மிரட்டினார். இது பற்றி பொலிஸிடம் புகார் செய்துள்ளேன் என்றார்.

தற்போதைய மிரட்டல் விவகாரம் சைபர் கிரைம் பிரிவின் கீழ் வருவதால் உயர் அமைப்பான பெடரல் விசாரணை ஏஜென்சிக்கு (எப்.ஐ.ஏ) வீணாவின் புகாரை அனுப்பிவிட்டதாக லாகூர் பொலிஸார் தெரிவித்தனர். எனவே ஆசிப் மீது எப்.ஐ.ஏ. தான் விசாரணை நடத்தும்.

இது குறித்து வீணாவின் வைக்கீல் காவாஜா கூறுகையில்,

மோசடி மற்றும் ஏமாற்றுதல் அடிப்படையில் ஆசிப் மீது வழக்கு பதிவு செய்யவுள்ளோம். இதற்கு 3ஆண்டு சிறைத்தண்டனை, ஜாமீனில் வெளியேவர முடியாத கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்றார்.

**பாக்., கலக்கம்**

வரும் 30ஆம் திகதி மேற்கிந்தியத்தீவுகளில் இருபது–20 உலகக் கோப்பை தொடர் ஆரம்பமாக உள்ள நேரத்தில் ஆசிப் சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளார். இது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை கலக்கமடைய செய்துள்ளது.

இது குறித்து அணியின் முகாமையாளர் யாவர் சயீத் கூறுகையில்,

கிரிக்கெட்டில் மட்டும் கவனம் செலுத்தும்படி ஆசிப்பைக் கேட்டுக்கொண்டுள்ளோம். உலகக் கோப்பைத் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக செயல்படவேண்டியது மிகவும் அவசியம்.

வீணா விவகாரத்தை ஆசிப்பின் தனிப்பட்ட பிரச்சினையாக தான் கருதுகிறோம். இது வரை பயிற்சிக்கு ஒழுங்காகவந்துள்ளார். அனைத்து விடயங்களையும் கூர்ந்து கண்காணித்து வருகின்றோம் என்றார்.

## சென்னை அணியின் அரையிறுதி வாய்ப்பு



டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் மூலம் சென்னைசுப்பர்கிங்ஸ் அணியின் அரையிறுதி வாய்ப்பு குறைந்துள்ளதே தவிர, முடிந்து விடவில்லை. சென்னை அணி தனது கடைசி லீக்கில் நாளை கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியுடன் மோதுகிறது. இனி சென்னை அரையிறுதி வாய்ப்பைபெற சில முடிபுகள் இப்படி அமைய வேண்டும்.

டெக்கான் அணி தனது கடைசி 2 ஆட்டத் திலும் (பஞ்ஜாப் மற்றும் டில்லி எதிராக) தோல்வியடையவேண்டும். இதேபோல் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், அணி ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வென்று மும்பை யிடம் தோற்க வேண்டும். இவ்வாறு நடக்கும் போது ராஜஸ் தான், டெக்கான், கொல்கத்தா அணிகள் தலா 12 புள்ளிகளுடன் வெளியேறி விடும்.

சென்னை அணி பஞ்ஜாப்பை வெற்றி பெற்று 14 புள்ளிகளுடன் மும்பை, டில்லி, பெங்களூர் ஆகிய அணிகளுடன் சேர்ந்து அரையிறுதிக்குள் நுழைந்துவிடலாம்.

ஒரு வேளை மேற்கண்ட படி ஆட்டங்களின் முடிவு அமைந்து பஞ்ஜாப் அணியிடம் சென்னை தோல்வியடைந்து விட்டால் ராஜஸ் தான், டெக்கான், கொல்கத்தா, சென்னை ஆகிய அணிகளும் புள்ளிகளுடன் சமநிலையில் இருக்கும்.

அப்போது ஓட்டவிகித அடிப்படையில் ஒரு அணி அரையிறுதிக்கு தேர்வாகும். ஆனால் இதுமாதிரி கணக்கீடுகளை தவிர்க்க வேண்டும் என்றால் சென்னை அணி பஞ்ஜாப் அணிக்கு எதிராக நல்ல ஓட்டவிகித சராசரியில் பெரியளவில் வெற்றிபெற்றால் போதும். அரையிறுதிக்கு முன்னேறிவிடலாம்.

...நகர சபை, யாழ்ப்பாணம்,



# கனடாவில் நாடு கடந்த அரசுக்கான தேர்தலில் ஈழவேந்தனும் போட்டி!

நாடு கடந்த அரசுக்கான கனேடியத் தேர்தலுக்காக மொத்தம் 43 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதி வேட்பாளர்களின் விபரங்கள் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்தவர்களில் இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனும் அடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் தமிழர் தகவல் ஆசிரியர் மு.திருச்செல்வம், கலாநிதி சிறிஸ்கந்தராஜா, ஜோ.அன்ரனி, பொன் பால்ராஜன் உள்ளிட்டவர்களும் போட்டியிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே ஐக்கிய ராஜ்ஜியத்துக்கான நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தியும் வேட்புமனுத்தாக்கல் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கூட்டமைப்...

டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் ஓர் ஆசனம் கிட்டும். அத்துடன் ஆசனங்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்வடையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-1)

## ஐ.ம.மு...

மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனது ஆதரவாளர்கள் தன்னைச் சுற்றி வளைத்து நின்று தன்னைக் காப்பாற்றியதாகவும் தனது ஆதரவாளர்கள் நாவலப்பிட்டியில் தாக்கப்பட்டதற்கு மறுநாள் இது இடம் பெற்றிருக்கின்றது எனவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

தொடர்ந்த இத் தாக்குதல் காரணமாக மலையக வாக்காளர்கள் பெரிதும் அச்சமுற்றிருக்கின்றார்கள். இது அவர்களை வாக்களிக்க விடாமல் தடுத்து விடும். மக்கள் வாக்களிக்கும் தமது ஜனநாயகக் கடமையினை நிறைவேற்ற விடாமல் தடுப்பது அவர்களுடைய அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி இவ் விடயத்தில் தலையிட்டு அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக் கையை எடுக்க வேண்டும் என்றும் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார். (ச-5)

## வினைத்...

கும் அளவில் அதிகாரத்தை வழங்கியுள்ளனர்.

விகிதாசார தேர்தல் முறையில் இதுவரை எந்தக் கட்சியும் இவ்வாறான அதிகாரத்தை இதுவரை பெற்றதில்லை. இந்த வெற்றியை வழங்கியதற்காக மக்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

அமைச்சரவைக்கு நியமிக்கப்படுபவர்கள் அரசியல் அனுபவம் உள்ளவர்களாகவும் தேசிய பிரச்சினை குறித்துப் புரிந்தவர்களாகவும் செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவும் இருப்பார்கள்.

அத்துடன் சிரேஷ்ட அனுபவம் உள்ளவர்களையும் மறக்க முடியாது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ச-5)


**மதி கலர்ஸ் பிறிண்டேர்ஸ்**

**ஓவ்செற் மிசின் மைண்டர்**

அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவர்களும் தேவை. (யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

**கணனி ரைப் செற்றிங்**

(பெண் பிள்ளைகள்)

தொடர்பு: 15/2, முருகேசர் லேன், நல்லூர்.

தொ.பே: 021 222 9285

(சி-116)


## நல்லூரில் அமைக்கப்பட்டு...

இதேவேளை மார்ச் மாத முற்பகுதியில் மேற்படி வீதியிலுள்ள கடைகளை அகற்றுமாறு மாநகர சபையினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும்,

எனினும் புத்தாண்டுக்குப் பின்னர் கடைகளை அகற்றுவதாக வியாபாரிகள் உறுதியளித்தமைக்கு அமைய நேற்று முதல் கடைகள் அகற்றப்படுவதாகவும் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நல்லூரிலுள்ள நடைபாதை வியாபார நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றி நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலின் புனிதத் தன்மையை பேணுமாறு வலம்புரி பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-7,30)

## சிறிலங்கா முஸ்லீம் காங்கி...

பேச்சுக்களிலும் ஈடுபடவில்லை. அவர்கள் எம்மை அணுகவுமில்லை.

அரசிடமிருந்து அழைப்புக்கள் வந்தாலும் அவர்களுடன் இணைந்து நாம் செயற்படப் போவதில்லை. எதிர்க்கட்சிகளுடன் இணைந்தே நாட்டை அபிவிருத்தி செய்ய முற்படுவோம்.

எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் எமது கட்சியின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சியாகவே நாம் அரசுடன் இணைந்து செயற்படப் போகின்றோம் என்ற செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளை அதிகம் நாம் பெற்றுள்ளோம். எனவே அரசில் இணைந்து கொள்ள முடியாது.

எனினும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் எதிர்த் தரப்பிலிருந்தவாறு அரசுக்கு ஆதரவுகளை வழங்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## சிறுபா...

பேச்சுவார்த்தைகளில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை நாடாளுமன்றத்தில் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் போது இணைந்து செயற்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமக்கு இந்த அழைப்பை விடுத்ததாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் மீள் தேர்தல்கள் நடைபெற்று முடிந்ததன் பின்னர் கொழும்பில் வைத்து இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ரவூப் ஹக்கீம் தற்போது கண்டியில் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் பல பேரினவாத சக்திகள் இயங்கி வருவதாகவும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5,9)


**கலை வர்த்தக கணித உயிரியல் பிரிவுகள்**

**A/L 2012** — இன்று மாலை 3.00 மணி

**ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்**

**ACA** — கோவில் வாசல், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

(1198)

**காணி விற்பனைக்கு**

யாழ். நகருக்கு சுமார் 4Km தூரத்தில் நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்பு மிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய சுமார் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்புகளுக்கு:-

077 2469015, 072 5682849, 078 6711952

(1176)

"தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்."

வாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

**வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும்**

**2010 ஏப்ரல் 14 ஆம் திகதி**

**புதன் மாலை முதல் 18 ஆம் திகதி ஞாயிறு வரை**

**தினமும் மாலை 5.30 மணிக்கு**

இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலை,

111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம், கொலை இன்னும் தீய பழக்கவழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம், சந்தோஷம், பாவமன்னிப்பு தருகிறார்.

இலவச உட்பிரவேசம்!

காணிக்கை சேர்க்கப்படமாட்டாது!!

வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்!!!

(1185)

**STUDY & WORK IN UK**

பட்டதாரியாக வேண்டுமா?

பட்டப்பின்படிப்பை மேற்கொள்ளப்போறீர்களா?

*We will meet you at your home town Jaffna*

*Parents & Students!*

- Professional consultancy services for UK studies.
- Arrange English language development programs.
- Best universities & "A "grade UK colleges admissions.
- Perfect Visa guidance & documentation.
- Ticketing & travel arrangements.



*You can meet our special educational consultants from Colombo for your successful UK universities & College enrollments.*

*ON- 18TH APRIL 2010: 9.00AM-12.00AM*

*@BRITISH BUSINESS SCHOOL, N0 140, TEMPLE ROAD JAFFNA.*

**Come & Join for Sep 2010 Intake**

For More info: Call: +94773071615/Email: kiru@stretchmo.com

STRETCHMO consultants www.stretchmo.com

(c-115)


## மரண அறிவித்தல்

# மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன்



மீசாலை வேம்பிராயைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன் 14.04.2010 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மார்க்கண்டு கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும், அ.கி. ஏரம்பமூர்த்தி தங்கம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், விமலகுமாரியின் (நடன ஆசிரியை, சாவகச்சேரி, இந்துக்கல்லூரி) அருமைக் கணவரும், காலம் சென்ற ரஞ்சனா, கலைவாணனின் (லண்டன்), அருமைச் சகோதரனும், கிரிபரன், ஜனார்த்தனன், பிரணவன் ஆகியோரின் அருமைத் தந்தையும், புனிதகுமாரி (முதன்மை ஆசிரியர், தென்மராட்சி வலய கல்வி அலுவலகம்), கிருஷ்ணகுமாரி (நகரசபை- சாவகச்சேரி) சாரதாதேவி (சீதை) (லண்டன்), கீதவல்லி, இளங்கோ (சுவிஸ்), இளமுருகன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ஈழநேசன் (சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்-யாழ்ப்பாணம்), வித்தியானந்தன் (நூலகர்-யாழ். பொது சனநூலகம்), ஜெயலக்சுமி (சுவிஸ்), வனிதா (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும்,

சயந்தனின் பெரிய தந்தையும், பரதன், விசாகன், சொரூபினி, ராகவன், சேயோன், வித்தகி ஆகியோரின் சிறிய தந்தையும், வானதி, ஆதவன், அக்ஷதன், ஆதித்தியன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.04.2010 ஞாயிற்றுக்கிழமை நாளை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

தகவல்:

ஸ்ரீ.விமலகுமாரி (மனைவி),

பிள்ளைகள்.

(சி-114)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.